...ம் ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

...ங்கள்: பன்னிரண்டு

...08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 16 திங்கட்கிழமை (01.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347




# ...ராணுவ நடவடிக்கைகள் ...மழையினால் பின்னடைவு

(கொழும்பு)

...பகுதியில் நிலவும் சீரற்ற காலநிலையால் ...ர்க் களமுனைகளிலுள்ள படையினரின் ...ணுவ முன்னெடுப்புக்கள் பாதிக்கப்பட் ...ளன. அத்துடன் படையினருக்கான ஆயு ...கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொ ...ளின் விநியோகங்கள் தடைப்பட்டுள்ளன ...க வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டியில் வான் தாக்குதல்

(கொழும்பு)

விமானப் படையினரின் மிக்-24 ரக போர் உலங்கு விமானங்கள் நேற்றுக் காலை அக்கராயன்குளம் மேற்கு முறிகண்டி பகுதியில் தாக்குதல் மேற்கொண்டுள்ளன.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீது வான் தாக்குதல் நடத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ச-5)

## வெள்ளப் பாதிப்பு
## யாழ்.மாவட்டத்துக்கு ஒருகோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக ஒரு கோடியே தொண்ணூறு இலட்சம் ரூபா வழங்கப்பட்டிருப்பதாக அனர்த்த நிவாரண மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

மேலும் நிதி தேவைப்படும் பட்சத்தில் நிதி உதவி வழங்க அமைச்சு தயாராக இருப்பதாகவும் அவர் (12ஆம் பக்கம் பார்க்க)

## ...ீரற்ற காலநிலை காரணமாக ...ன்று இலட்சம் மக்கள் பாதிப்பு
### யாழ்.அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பெய்த மழையினால் ...3 ஆயிரத்து 404 குடும்பங்களை சேர்ந்த இலட்சத்து 21ஆயிரத்து 138பேர் இடம் ...யர்ந்துள்ளதாக யாழ்.அரசஅதிபர் ...ணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது,யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் 9 பேர் மரணம் அடைந்துள்ளனர். உடுவில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் தலா 2பேர் உயிரிழந்துள் (12ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண நடவடிக்கை குறித்து இன்று விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் பெய்த அடை மழை பெரு வெள்ளம் காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் முகமாக சமூக சேவைகள் அமைச்சரின் யாழ்.பணிமனையில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று நடத்தப்படவுள்ளது.

முன்னதாக வெள்ள அனர்த்தம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 28ஆம் திகதி யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இதில் மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலர்கள் ஆகியோருடன் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## ...டீர் சுற்றிவளைப்பு 25 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகளில் ...ாலிஸாரும் இராணுவத்தினரும் நடத்திய ...ீர் சுற்றுவளைப்புத் தேடுதல்களின் போது ...ண்ணொருவர் உட்பட 25 பேர் சந்தேகத் ...ன் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக ...ாலிஸார் (12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

- தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்
- கிராமசேவையாளர்களுக்கு இன்று பயிற்சி ஆரம்பம்

## இந்திய-பாக். உறவில் முறுகல் எல்லையில் யுத்த அபாயம்!

(புதுடில்லி)

மும்பை தாக்குதலில் 200 பேர் வரையில் பலியானமைக்கு பாகிஸ்தானுடன் தொடர்புடைய தீவிரவாதிகளே காரணம் என இந்தியா குற்றஞ்சாட்டியதையடுத்து, இந்திய-பாக். எல்லையில் போர்ச் சூழல் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் கடுமையான சொற்பிரயோகங்களைப் பிரயோகித்துள்ளனர்.

மும்பை தாக்குதல் தொடர்பில் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் பின்னணியிருப்பதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்தும் தெரியவந்துள்ளதையடுத்து, பாக்.அதிகாரிகளுடன் தொலைபேசியில் உரையாடிய இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாகிஸ்தான் தீவிரவாதத்தை கட்டுப்படுத்த தவறினால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரும் என்றும் எச்சரித்துள்ளார்.

இதனால் இரு தரப்பு உறவிலும் விரிசல் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷாஹ் மஹ்மூத் குரேஷி இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

ஆதாரங்கள் இல்லாமல் பாகிஸ்தான் மீது குற்றம் சுமத்துவதனால் மும்மை குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணைக்கு உதவ ஐ.எஸ்.சி தலைவரை அனுப்ப முடியாது என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் பாகிஸ்தானில் செய்தியாளர்களைச் (12ஆம் பக்கம் பார்க்க)

## ...மூன்று தன்னார்வு நிறுவனங்களை நாட்டை விட்டு வெளியேற்றத் திட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் உரிய நடைமுறைகளை பின்பற்றாமை காரணமாக மூன்று தன்னார்வு நிறுவனங்களை நாட்டிலிருந்து வெளியேற்றுமாறு கேட்கப்பட்டுள்ளதாக அர...ாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோர்வேயை தளமாகக் கொண்ட நோர்வேஜியன் பீப்பல்ஸ் உதவி நிறுவனம், போரூட் மற்றும் நெதர்லாந்தை மையமாகக் கொண்ட சோஆ ஆகிய நிறுவனங்களே நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளன.

இந்த தன்னார்வு நிறுவனங்கள் ஏற்கனவே வன்னியிலிருந்து வவுனியாவுக்கு தமது நடவடிக்கைகளை இடமாற்றியுள்ளன.

இதேவேளை குறித்த தன்னார்வு நிறுவனங்களைத் (12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்கா மேலும் நீடித்தது

(கொழும்பு)

அமெரிக்காவினால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடையை மேலும் நீடிக்க திட்டமிட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால், தமிழீழ விடுதலைப் புலிகளைத் தொடர்ந்தும் பயங்கரவாத பட்டியலில் இணைத்துள்ளதாக தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை அமெரிக்கா 1997 ஆம் ஆண்டு முதன்முதலாக தடை செய்யப்பட்ட இயக்கமாக பிரகடனப்படுத்தியிருந்தது.

இதன் பின்னர் 2003 ஆம் ஆண்டு இந்த தடை மேலும் 5 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருந்தது. (12ஆம் பக்கம் பார்க்க)

...டுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சீரற்ற கால நிலையால் படையினருக்குப் பாதிப்பு

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

வடபகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட பாதகமான காலநிலையினால் படைத்தரப்பு கடுமையான நெருக்கடிகளை சந்தித்து வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது, வடபகுதியில் கடந்த புதன் கிழமை ஏற்பட்ட கடுமையான காலநிலையால் யாழ். குடாநாட்டில் உள்ள படையினருக்கு கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

கடற்பரப்பில் ஏற்பட்ட கடுமையான காலநிலை காரணமாக காங்கேசன்துறை கடற்பரப்பில் சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த ஆறு டோரா படகுகள் சுற்றுகாவல் பணிகளை நிறுத்தின.

இதேவேளை மண்டைதீவு கடற்பரப்பில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மூன்று நீருந்து விசைப்படகுகளும், சிறப்பு தாக்குதல் படகு அணியைச் சேர்ந்த ஒரு படகும் கடற் கொந்தளிப்பினால் கடலில் மூழ்கியுள்ளன.

எனினும் படகுடன் கடலில் மூழ்கிய கடற்படையினர் அனைவரும் காப்பாற்றப்பட்டுள்ளனர். மேலும் தனங்கிளப்பு பகுதியில் நிலைகொண்டிருந்த 200 இராணுவத்தினரும் இரு போர் டாங்கிகளும் கடும் வெள்ளத்தில் சிக்கியிருந்தன.

கிளாலி ஊடாக விடுதலைப்புலிகளின் நகர்வை தடுக்கும் முகமாக இப்படையினர் அங்கு நிறுத்தப்பட்டிருந்தனர். நீர்மட்டம் உயர்ந்த போது பதுங்குகுழிகளில் இருந்த படையினர் உயர்வான நிலப்பகுதியை நோக்கிச் சென்றுள்ளனர்.

படையினரை காப்பாற்ற உலங்கு வானூர்திகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சீரற்ற காலநிலை காரணமாக கைகூடவில்லை. பாதுகாப்பு அங்கிகளை வழங்க எடுத்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

இது தொடர்பாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு யாழ்.மாவட்டத்தின் பதில் கட்டளைதளபதி மேஜர் ஜெனரல் ரஜித சில்வா தெரிவித்திருந்தார். இறுதியில் கடற்படையின் ஆறுபடகுகள் இந்த மீட்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன எனஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சி தனங்கிளப்பு பகுதியில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக, வெள்ளத்தினால் சிக்குண்ட 200 படைவீரர்கள் கடற்படையினரின் படகுகளின் மூலம் காப்பாற்றப்பட்ட அதேவேளை, கேரதீவு பிரதேச களமுனை யில் பணியாற்றிய நான்கு படையினர் காணாமல் போயுள்ளனர் என்று இராணுவத்தரப்பு அறிவித்துள்ளது. காணாமற்போன படையினரைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையை படையினர் மேற் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் நிலை கொண்டிருந்த பதுங்குழிகளில்வெள்ளம் ஏற்பட்டதை அடுத்து, அவர்களுக்கு உயிர்தப்பும் அங்கிகளை வழங்கியும் அது பயனளிக்காமல் போனது என லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5)

# கடற் படையினரால் கைது செய்யப்பட்ட 26 பேர் பரு. நீதிமன்றத்தில் ஒப்படைப்பு

கிளிநொச்சி சுண்டிக்குளம் கடற்பகுதியூடாக மன்னாருக்குச் சென்ற 26 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ் 26 பேரையும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பருத்தித்துறை பொலிஸார் ஆஜர் படுத்தினர்.

இவர்களை விசாரணை செய்த பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி கே.அரியநாயகம், அவர்களை குருநகர் நலம்புரி முகாமில் தங்க வைக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இவ்வாறு சுண்டிக்குளம் கடற் பகுதியூடாக வந்தவர்களின் விபரம் வருமாறு, நவரட்ணம் அற்புதராசா (வயது 46), அற்புதராசா மஞ்சுகவி (வயது 36), நவரட்ணம் ஹஸ்கோ (வயுது 13), நவரட்ணம் மயூரன் (வயது 15), நவரட் ணம் தினேஷ் (வயது 12), நவரட்ணம் அனுஷ்கா (வயது 9), நவரட்ண்ம் தேனுராஜ் (வயது 5),

சுப்பிரமணியம் நிஷாந்தன் (வயது 18), ஞானசேகரம் ரகு (வயது 27), ரகு ஊர்மிளா (வயது 21), ரகு கலைமாறன் (10 மாதக் குழந்தை), மகேந்திரன் விமலராஜ் (வயது 23) சிவதாஸ் ஜெயபதி (வயது 19), அருந்தவராஜா அசோக்(வயது 19), அருந்தவராஜா யுவராஜ் (வயது 14),

குமாரசாமி ஞானசேகரம் (வயது 40), ஞானசேகரம் ஜெயராணி (வயது 36), ஞானசேகரம் நிரோஜா (வயது 18), ஞானசேகரம் ரேவதி (வயது 14), புவியன்குமார் ஜெயசித்திரா (வயது 28), புவியன்குமார் சிந்துஜா (வயது 9) புவியன்குமார் ஜிந்துஜா (வயது 7),

கணேஷலிங்கம் கோகுலம் (வயது 49) கணேஷலிங்கம் கஜானா (வயது 14) கணேஷலிங்கம் தஜானி (வயது 4), கணேஷ லிங்கம் ஜய்மின் (10 மாதகுழந்தை), ஆகிய 26 பேரும் கிளிநொச்சி தாளியழைப் பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் மன்னாரிலுள்ள உறவினரிடம் சென்று கொண்டிருந்த போது படகு பெற்றோல் இன்றி கடலில் தத்தளித்தபோதே கடற்படையினர் தம்மை கைது செய்ததாக நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர். (ச-5,52)

# கோதுமை மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக புனர்வாழ்வுச் செயலகத்தில் இருந்து கோதுமை மாவிற்கான வழங்கல் கட்டளையினைப் பெற்று இதுவரை கோண்டாவில் களஞ்சியத்தில் இருந்து கோதுமை மாவினைப் பெற்றுக் கொள்ளாத பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இன்று காலை கோண்டாவில் களஞ்சியத்தில் மாவினைப் பெற்றுக்கொள்ளுமாறு அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

(ச)

# யாழ்.நகருக்கான குடிநீர் விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மடத்தடிச் சந்தியில் பிரதான குடிநீர் விநியோகக் குழாய் சேதமடைந்துள்ளதனால் யாழ்.நகரம் மற்றும் நாவாந்துறைப்பகுதிகளுக்கான குடிநீர் விநியோகத்தில் தடையேற்பட்டுள்ளது.

திருத்த வேலைகளை உடனடியாக மேற்கொண்டு வருகின்ற போதிலும் அவை நிறைவடையும் வரை குறிப்பாக இன்று முதல் குடிநீர் விநியோகம் மறு அறிவித்தல்வரை தடைப்படுமென யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார்.

(ச)

# தொண்டர் ஆசிரியர் சங்க விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் என தொண்டர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

(ச)

# சடலம் மீட்பு

(கொடிகாமம்)

தென்மராட்சி வரணிப்பகுதியில் உள்ள குளம் ஒன்றிலிருந்து சூட்டுக்காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்ட இச்சடலம் அடையாளம் காண்பதற்காக கொடிகாமம் பொலிஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ச-1)

# காரைநகர் வெள்ள அனர்த்த பதிவுகள்...








படங்கள்: கற்பகன்








# இன்று ஒரு தகவல்

## சகுனமும் சங்கடமும்

ஒரு கடைக்குப் போய் பணத்தைக் கொடுத்து பத்திரிகை கேட்டேன்.

அவர் உடனே அங்கு அடுக்கி வைத்திருந்த பத்திரிகையில் ஒன்றை எடுத்து என்கையில் தந்தார். வாங்கிக் கொண்டேன்.

மீதிப்பணத்தை எடுத்து அதை என்கையில் கொடுக்காமல் எதிரில் இருந்த பலகையில் வைத்து எடுத்துக் கொள்ளச் சொன்னார்.

அவர் எப்பொழுதும் அப்படித்தான் செய்வார். நானும் எடுத்துக்கொண்டு வந்துவிடுவேன்.

இவர் ஏன் இப்படி செய்கிறார் என்று எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம். ஒருநாள் அவரிடமே கேட்டேன்.

அதற்கு அவர், ''காசைக் கையில் கொடுத்தால் நம்மிடம் உள்ள 'லட்சுமி' போய்விடுமாம். அதாவது பணம் செலவாகி விடுமாம்'' என்றார்.

இன்னொரு நண்பர் வழக்கத்துக்கு மாறாக மிகவும் சோகத்துடன் உட்கார்ந்திருந்தார்.

"என்ன ஆச்சு? ஏன் இப்படி கப்பல் கவிழ்ந்தது மாதிரி உட்கார்ந்து இருக்கிறீர்கள்? என்று கேட்டேன்.

அதற்கு அவர், "கப்பல் கவிழ்ந்தால் கூட நான் இப்படி கவலைப்படமாட்டேன். என் உச்சம் தலையில் பல்லி ஒன்று விழுந்து விட்டது!'' என்றார்.

அதற்காகவா இப்படி? என்று ஆச்சரியப்பட்டேன்.

"ஆமாம் பல்லி உச்சம் தலையில் விழுந்தால் என்ன பலன் என்று பஞ்சாங்கத்தில் பார்த்தேன் மரணம் என்று போட்டிருக்கின்றது!'' என்று சொல்லி விட்டு அவர் தொடர்ந்து கவலைப்பட ஆரம்பித்தார்.

என்னுடன் வேலை பார்க்கும் ஒருவர் இருந்தார். அவர் எப்பொழுதும் அலுவலகத்திற்கு நுழையும் போது வலது காலை வைத்துத்தான் உள்ளே நுழைவார்.

என்றைக்காவது தவறுதலாக இடதுகாலை வைத்து உள்ளே வந்துவிட்டார் என்றால் அன்று முழுவதும் மனச் சஞ்சலப்பட்டுக் கொண்டே இருப்பார்.

பூனை குறுக்கே போனால் கூட சகுனம் பார்ப்பவர்கள் உண்டு.

ஆனால் ஒருவர் பக்கத்துவீட்டு றேடியோவில் மியாவ் மியாவ் பூனைக்குட்டி என்று பாட்டுச் சத்தம் கேட்டால் கூட சகுனம் சரியில்லை என்று பிரயாணம் மேற்கொள்ள மாட்டார்.

அளவுக்கு மீறிய சகுன நம்பிக்கையோடு பயமும் சேர்ந்து விட்டால் அது ஒருவரின் மனநிலையை பாதித்து விடும் என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்து. வாழ்க்கையையே தடுமாற வைத்துவிடும்.

சிலபேர் காய்கறி நறுக்க கத்தியை கையில் எடுத்தால் கூட நேரம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டுத் தான் வேலையை ஆரம்பிப்பார்களாம்.

அறிவு தான் மனதுக்கு வாத்தியாராக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கை நிம்மதியாக இருக்கும்.

அறிவு - மனம் சொல்லும்படி கேட்க ஆரம்பித்தால் இடைஞ்சல் தான்.

ஒருவருக்கு ஏழாம் நம்பர் தான் ராசியான நம்பர். 7ஆம் திகதி தான் எந்தக் காரியத்தையும் ஆரம்பிப்பார். ஏழு எழுத்து வருவது மாதிரி பெயரை மாற்றி வைத்துக் கொண்டார்.

ஏழு மணிக்குத்தான் தினமும் எழும்புவார்.

ஏழாம் நம்பர் வீட்டில்தான் குடியிருக்கிறார்.

கல்யாணமும் ஏழாம் திகதி தான் பண்ணிக் கொண்டார்.

அவர் ஒருநாள் குதிரைப் பந்தயத்திற்குப் போனார்.

குதிரையின் பெயரைக்கூட ஏழு எழுத்தில் அமைந்திருப்பது போல பார்த்து பணத்தைக் கட்டினார்.

பந்தயம் நடந்தது. "என்ன ஆச்சு சேர்?'' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் ''நான் பணம் கட்டிய என்னுடைய குதிரை ஏழாவதாகவே வந்து சேர்ந்தது'' என்றார் சோகத்துடன்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு மாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் 530 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்கியுள் ளார்.

இதன்பிரகாரம் ஏற்கனவே 171 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப் பட்ட நிலையில் ஏனைய 359 தொண்டர் ஆசிரியர்களுக்கும் விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென சமூக சேவைகள் அமைச்சரும் வடக்கு மாகாண விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் 530ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமென நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதற்கமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நடவடிக்கைக்கு அமைவாக 530 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியம னம் வழங்குமாறு முன்னர் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க வடக்கு மாகாண சபை நிர்வாகத்திற்கு அறிவித்திருந்தார்.

எனினும் , வடக்கு மாகாண பதில் ஆளுநராக இருந்த ரியல் அட்மிரல் றொகான் விஜயவிக்ரம 171 தொண் டர் ஆசிரியர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்க அனுமதியளித் தார்.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி கவனத்திற்கு கொண்டு வந்ததற்கு அமைய தற்போது மீதமுள்ள 359பேருக்கும் நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்க கல்வி அமைச்சு அனுமதியளித்துள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் 5ஆம்திகதி வடக்கு மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கும் கல்வி அமைச்சருக்குமிடையே விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஓ-5)

# உரிய பாடசாலையில் நியமனத்தை ஏற்க மறுக்கும் ஆசிரியர்கள் நீக்கப்படுவர்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவிப்பு

(திருகோணமலை)

யாழ் .மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் தமது கடமைகளை உரிய பாடசாலையில் பொறுப்பேற்க வேண்டுமென வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது .

முதல்கட்டமாக வழங்கப்பட்ட 387 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் நியமனம் கிடைக்கப் பெற்ற பாடசாலைகளில் உரிய திகதிகளில் கடமையைப் பொறுப்பேற்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சு அசாதாரண சூழல் கருதி வேறு மாவட்டங்களில் தற்காலிக இணைப்பு வழங்கப்படமாட்டாதெனவும் தெரிவித்துள்ளது.

பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைத்தவர்கள் விண்ணப்பித்த பாடசாலைகளுக்கே நியமிக்கப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாண கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட பாடசாலையில் தற்போது நியமனத்தை பொறுப்பேற்க மறுக்கும் ஆசிரியர்கள் நீக்கப்பட்டு அப் பாடசாலைகளுக்கு கடமைக்குச் செல்ல முடியுமெனத் தெரிவிக்கும் மேலதிகமாகவுள்ள பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள் ளதாகவும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஓ-5)

## இராசி பலன்

01.12.2008
(கார்த்திகை 16 திங்கட்கிழமை)
சதுர்த்தி முழுவதும்
பூராடம் பிற்பகல் 4.11 மணிவரை
இராகுகாலம் 7.45-9.15 மணிவரை
சுபநேரம் 12.15-1.45 மணிவரை
சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | ஆன்றோர் சந்திப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம், சிறுவியாதி. |
| இடபம் | வீண்தொல்லை, முயற்சி தாமதம், முழங்கால் வலி, போசனசுகம். |
| மிதுனம் | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், பண்வருவாய் , குடும்ப மகிழ்ச்சி. |
| கடகம் | சுகவாழ்வு, செய்தொழில்விருத்தி, காரிய நன்மை, சுவாரஸ்யம். |
| சிங்கம் | வியாபார நன்மை, குடும்பக் கவலை, திடீர்நன்மை, அதிகசெலவு. |
| கன்னி | கல்வியில் ஆர்வம், அற்பர் உறவு, பயந்த சுபாவம்,ரோகநிலை. |
| துலாம் | இனிய நிகழ்வு, கூட்டுமுயற்சி, அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை. |
| விருச்சிகம் | மாதர் நட்பு, பொருள் விரயம், எடுத்த காரியம் தாமதமாகும், சயன சுகக் குறைவு. |
| தனுசு | ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம்,புதிய பொருள் சேர்க்கை, சயன சுகம். |
| மகரம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப்படல், சயனசுகக் குறைவு , திடீர்பயணம். |
| கும்பம் | தொழில் சிந்தை, பொருள் சேர்க்கை, பெருமையடைதல், குடும்ப மகிழ்ச்சி. |
| மீனம் | உற்சாகம், நல்ல செய்தி, பிறர் உதவி, கடின உழைப்பு. |

வளவன்

# புதிதாக நியமனம் கிடைத்த கிராமசேவையாளர்களுக்கு பயிற்சி

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம் கிடைத்த 127 கிராம சேவையாளர்களுக்கான பயிற்சிகள் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகுமென யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இப் பயிற்சிகளுக்கு யாழ்.மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட 127 கிராமசேவையாளர்களும் கலந்துகொள்ள வேண்டுமெனவும் நியமனக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் கடந்த மாதம் 26ஆம் திகதி வலம்புரியில் வெளிவந்த பெயர் விபரத்திற்கமைவாக பயிற்சியில் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவில் நியமனம் கிடைத்தவர்கள் தொடர்பான விபரம் பொதுநிர்வாக அமைச்சினால் அனுப்பிவைக்கப்படவில்லையெனவும் அது தொடர்பில் விபரங்களைக் கேட்டு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இதற்கான பதில் இவ்வாரம் கிடைக்கப்படுமெனத் தெரிவித்த யாழ்.அரச அதிபர் க.கணேஷ் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் 5 பேருக்கு நியமனம் வழங்கப்படுமெனக் குறிப்பிட்டுள்ளார். (5)

சர்வதேச HIV / AIDS தினம் - 2008 டிசெம்பர் 01

நம்பிக்கைக்குரிய பாலுறவுத் துணையுடன் மட்டுப்படுத்தப்படாத பாலுறவுத் தொடர்புகள் மிகவும் ஆபத்தானதென்பதுடன் இவ்வாறான தொடர்புகளை ஏற்படுவதைத் தவிர்ப்பதால் அல்லது ஆபத்தான பாலுறவுத் தொடர்புகளின் போது பாதுகாப்புறைகளை (கொண்டோம்) பாவிப்பதால் HIV / AIDS இலிருந்து ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். HIV தொற்றுக்கான ஆபத்தான சூழ்நிலைகளை ஒவ்வொருவரும் அறிந்திருப்பதுடன் தனிமனித விழிப்புணர்வு மூலம் மாத்திரமே HIV / AIDS இனைக் கட்டுப்படுத்த முடியும்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

## அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

தவறவிடப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் இரண்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேசிய அடையாள அட்டைகள் கந்தையா வெள்ளியம்பலம் (240982013V) என்பவருடையதும் மற்றயது கொக்குவில் மேற்கைச் சேர்ந்த நவரட்ணம் பிரதீபன் (853192739V)என்பவருடையதும் ஆகும். உரியவர்கள் தகுந்த அடையாளங்களைக் காண்பித்து அலுவலக நேரத்தில் வலம்புரிக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். (5)

## சுகாதார முகாமையாளர் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச்சேவையில் சுகாதார முகாமை உதவியாளர் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பதற்காக இம்மாதம் 20ஆம் திகதி நடைபெற்றதற்கு மேலதிகமாக பின்வரும் 23 விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை 4ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் முற்பகல் 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றையதினம் பின்வரும் மூல ஆவணங்களுடன் (எல்லாவற்றிலும் ஒவ்வொரு ஒளிப்படப் பிரதியுடனும்) தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

- தேசிய அடையாள அட்டை
- பிறப்புச் சான்றிதழ்
- வதிவிடச் சான்றிதழ் (2008.2.29 இல் குறைந்தது 3 வருடம் இம் மாவட்டத்தில் வசித்திருத்தல் வேண்டும்)
- க.பொ.த.(சா.த) பரீட்சைப் பெறுபேறு.
- க.பொ.த.(உ.த) பரீட்சைப் பெறுபேறு அல்லது பட்டதாரிச் சான்றிதழ்.

*நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டோரின் பெயர் விபரம் வருமாறு,*

ஸ்ரீ.பார்த்தீபன்(கோப்பாய், ந.சுகிர்தா (சாவகச்சேரி), ஸ்ரீ.ஸ்ரீபிரியா (பிறவுண்வீதி ,யாழ்ப்பாணம்), பா.தாரணி(பொலிகண்டி), த.சிவரஜினி(உரும்பிராய்), இ.கௌசிகா (அரியாலை), அ.சுகன்யா(சாவகச்சேரி), ம.பிரதீப் (நீர்வேலி), ச.சுகந்தா (கோண்டாவில்), மை.பி.கனிஷ்டாமேரி(தும்பளை), உ.இராகுலன் (வெள்ளவத்தை), க.கஸ்தூரி( அச்சுவேலி), தெ.சௌமியா(உரும்பிராய்), சி.காஞ்சனா (யாழ்ப்பாணம்), கே.எழில் முதல்வன் (வரணி), பா.சுபாமதி( சுதுமலை), சி.சிவானந்தன் (உரும்பிராய்), பொ.தாட்சாஜினி (கோண்டாவில்), அ.மந்தாகினி(யாழ்ப்பாணம்), சீ.வசந்தினி(கரவெட்டி), பா.சுகந்தி( பண்டத்தரிப்பு),சி.சிவரூபினி (யாழ்ப்பாணம்), யோ.நிமலன் (கோண்டாவில்). (ஓ)

## பொதுக் கூட்டம்

வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் அதன் 38ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் நிர்வாக சபை தெரிவினையும், பிரிவு உபசார விழாவினையும் நடாத்த உள்ளது. இந்நிகழ்வு 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சங்கத்தலைவர் ஆசீர்வாதம் யோன்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். இணைப்பாளர் சி.அ.உதயன் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம. வசந்தகுமார், மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, யாழ்.மாநகரசபை சுகாதாரப் பொறுப்பதிகாரி கு.கதிர்காமநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## சுத்திகரிப்புப் பணிகள்

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பகுதிகளிலுள்ள வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் குடிநீர் மிக மோசமடைந்துள்ளது. இதனைச் சீர்செய்வதற்காக பொதுக் கிணறுகள் அகதிமுகாம் உள்ள இடங்களிலுள்ள கிணறுகள், தனியார் கிணறுகள் என்பவற்றுக்கு சுகாதாரத் தொண்டர்கள்,பிரதேசசபைத் தொழிலாளர்கள் ,சனசமூக நிலைய அங்கத்தவர்கள் உதவியுடன் அந்த அந்தப் பகுதிகளுக்குரிய சுகாதாரப் பரிசோதகரால் குளோரின் போடப்பட்டு வருகிறது. இப் பணி தொடர்ந்து நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தொற்று நோய்கள் பரவக்கூடிய இடங்களில் பிரதேசசபை உதவியுடன் மருந்து தெளித்தல், நுளம்பு,இலையான் போன்றவற்றை கட்டுப்படுத்த மருந்து விசுறுதல்,குப்பைகள் அகற்றல் போன்ற பணிகள் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.குடிநீரை உடனடி சுத்திகரிப்புச் செய்வதற்கான மாத்திரைகளும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இறந்த ஆடுகள்,மாடுகள்,கோழிகள் என்பவற்றின் இறந்த உடல்கள் சுன்னாகம் பிரதேச சபையின் உதவியுடன் சுன்னாகம் கொத்தியாலடி கழிவு அகற்றும் இடத்தில் புல்டோசரின் உதவியுடன் நேற்று முன்தினம் புதைக்கப்பட்டுள்ளது.(ஓ-134)

### யாழ்.மாவட்ட பாடசாலைகளில்

## அடுத்த ஆண்டிற்கான பாடநூல்கள் 5ஆம் திகதி மாணவர்களுக்கு வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் மூன்றாம் தவணை விடுமுறைக்காக எதிர்வரும் 5 ஆம் திகதி மூடப்படும் போது அடுத்த ஆண்டிற்கான இலவசப் பாடநூல்களை மாணவர்களுக்கு வழங்குமாறு வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் யாழ். மாவட்டத்திலுள்ள 5 வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு அடுத்த ஆண்டிற்குத் தேவையான இலவச பாட நூல்களை முன்னதாகவே பெற்றுத் தருமாறு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக கடந்த செப்ரம்பர் மாதமே கல்வி அமைச்சினால் கப்பல்மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் 5ஆம் திகதி 3ஆம் தவணைக்காக பாடசாலைகள் மூடப்படும் போது அடுத்த ஆண்டிற்கான இலவச பாடநூல்களை மாணவர்களுக்கு வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார். (ஓ-5)




## நீர்மூலம் தொற்று நோய்கள் பரவும் அபாயத்தை தடுக்கும் நடவடிக்கைகள்

### -பொதுமக்களுக்கு சுகாதாரப் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் பின்னர் பெரும்பாலான நீர்நிலைகள் மாசடைந்துள்ளன. இதனால் நீர்மூலம் பரவும் நோய்கள் தீவிரமாகப் பரவ வாய்ப்புள்ளது.

எனவே பொதுமக்கள் இதனைத் தடுக்க பின்வரும் ஏதாவது ஒரு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீரையே பருகவேண்டும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். தடுப்பு முறைகளாவன,

கொதித்து ஆறிய நீர், சூரிய ஒளி மூலம் (சோடிஸ் முறை) சுத்திகரிக்கப்பட்ட நீர்,நீரை சுத்தமாக்கும் வில்லைகளால் சுத்தமாக்கப்பட்ட நீர்.

அத்துடன் பொதுமக்கள் தமக்கு வேண்டிய நீரை சுத்தமாக்கும் வில்லைகளை தமது பகுதி பொது சுகாதார பரிசோதகர் அல்லது குடும்பநல உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் தத்தமது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் இவ் வில்லைகளை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவித்துள்ளார்.

குடிப்பதற்கு அல்லது சமைப்பதற்கு தேவையான நீரை ஓர் கொள்கலனில் இட்டு வேண்டிய அளவு வில்லைகளை இட்டு 30 நிமிடங்கள் வரை விடவேண்டும். அதன் பின்னர் இந் நீரை குடிக்க அல்லது சமைக்க பாவிக்கலாம்.

வெள்ளம் வற்றிய இடங்களில் உள்ள கிணறுகள் இறைத்து துப்புரவு செய்யப்பட்டு குளோரின் இடப்படவேண்டும். ஏனைய கிணறுகள் வெள்ளம் வற்றிய பின் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

இவை பற்றிய மேலதிக ஆலோசனைகளை பொதுமக்கள் தாம் வதியும் பரிசோதகரிடம் அல்லது குடும்பநல உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ஓ)

## சர்வதேச மனித உரிமைகள் தின மக்கள் விழிப்புணர்வுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினம், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொது மக்கள் விழிப்புணர்ச்சி போட்டியை யாழ். மனித உரிமை ஆணைக்குழு நடாத்துகின்றது.

கடந்த மாதம் பத்திரிகைகளில் வெளிவந்த சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் 30 சரத்துக்களின் அடிப்படையில்,

- உயிர் வாழ்வதற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை உள்ளடக்கப்பட்டுள்ள உறுப்புரை எது?
- உறுப்புரை 26 இல் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமை எது?
- சுதந்திர பிரயாணம் எவ்விடத்திலும் வதிவதற்கான உரிமை உள்ளடக்கப்பட்டுள்ள உறுப்புரை எது?
- உறுப்புரை 5 இல் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமை எது?
- உறுப்புரை 2இல் குறிப்பிட்டுள்ளவை யாவை?

ஆகிய 5 வினாக்களுக்குமான பதில்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் இணைப்பாளர்,இலங்கை மனித உரிமை ஆணைக்குழு இல.06. மூன்றாம் குறுக்குத் தெரு,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சரியான பதிலினை அனுப்புபவர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3அதிர்ஷ்டசாலிகளுக்கு சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10 ஆம்திகதி பரிசில்கள் வழங்கப்படுமென யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ச.சிவராஜசிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-5)



கரவெட்டி பிரதேச சமுர்த்தி புலமைப் பரிசில் வழங்கும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் நிற்பதையும், சமுர்த்தி மகாசங்க முகாமைப் பணிப்பாளர் திருமதி கௌரி குணரட்ணம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், யாழ். செயலக சமுர்த்தி உதவி ஆணையாளர் ரீ.மகேஸ்வரகுமார், வடக்கு கிழக்கு மாகாண இளைப்பாறிய பிரதி பிரதம செயலாளர் எஸ்.சுவாமிநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும், கரணவாய் தெற்கு சமுர்த்தி வங்கிச் சங்கத் தலைவி எஸ்.சாரலதாவுக்குப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பரு.நிருபர்)

# நோத்முதல் கோபல்லவா வரை 163

## முதலாம் அரச சபை

முதலாம் அரசாங்க சபையை ஒன்றியொதுக்கல் செய்த வைத்திலிங்கம் துரைசுவாமி 8.5.1931 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் கூறியவை இங்கு குறிக்கற்பாலன "எங்களை வகுப்புவாதிகள் என்றும்,நாங்கள் வகுப்புவாத நன்மையின் பொருட்டே அரசாங்க சபையை ஒன்றியொதுக்கல் செய்தோம் எனவும் கூறுகிறார்கள். அது அப்படியல்ல. நாங்கள் கோழைகள் அல்லர். நாங்கள் ஒரு பகுதியாரின் நன்மையைப் பார்ப்பவர் அல்லர். என்னுடைய அரசியல் வாழ்வில் நான் என்றைக்காவது வகுப்புவாதம் பேசியது கிடையாது.வகுப்புவாதச் சீர்திருத்தங் கேட்டதுங் கிடையாது. தமிழராய நாங்கள் முழு இலங்கைக்குமாகவே, சாதி, சமய வேறுபாடு கருதாது உழைத்தோம். எங்கள் பாதுகாப்பு சிங்களவருடைய பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது என்று திடமாகக் கூறுவேன். எங்கள் சுதந்திரம் சிங்களவருடைய சுதந்திரத்திலேயே தங்கி உள்ளது என உறுதியாகக் கூறுவேன். எங்கள் அரசியற்றிருத்தம் சிங்களவருடைய பூரண ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது. பிரித்தாளும் பிரிவினை எங்களைப் பெரியவராக்க மாட்டாது. எனவே நான் மறுபடியும் இலங்கை வாழ் இனத்தவர் எல்லோரும் ஒற்றுமையாக இருக்குமாறும் இனமத வேறுபாட்டிற் பிரியாதிருக்குமாறும் முழு

**மீள் பார்வை**

இலங்கையர் சார்பிற் கேட்டுக் கொள்ளுகிறேன்."

தமிழர் அரசாங்கசபையை ஒன்றியொதுக்கல் செய்த காலத்தில் அவர்களைத் தென்னிலங்கையரோடு ஒற்றுமைப்படுத்த அரசியற் பண்டிதர்கள் முயற்சி செய்தனர். அவர்களில் ஒருவர் விரக்தியோடு "இந்தத் தேயிலைத் தோட்டங்களும் றப்பர்த் தோட்டங்களும் வந்தமையால் தானே உந்த வித்தியாசம் ஏற்பட்டது" என்றாராம். வெளிநாட்டு மூலதனப் பெருக்கம் இலங்கையில் வேலை செய்தமையால் சுதேசிகளுக்கு வசதியீனம் ஏற்பட்டது என்றார்கள். ஆனால் கண்டிச் சிங்களவர் தோட்டங்களில் நாளாந்த வேலை செய்வதற்கும் மறுத்தமையாற்றானே தென்னிந்திய மக்கள் பெருந்தொகையினராக இங்கே வரவழைக்கப்பட்டார்கள் என எமர்சன் ரென்னென் முதலிய அறிவாளிகள் கூறினார்கள். அன்றி அந்தக் காலத்தில் இந்தியத் தொழிலாளர் ஆயிரக்கணக்காக இங்கே வராதிருந்தால் இன்று செல்வங் கொழிக்கும் கழனிகள் எல்லாம் கருங்காடுகளாகவே இருக்கும் என்றார்கள்.

சட்டசபையின் இறுதிக்காலத்திலே சிங்களவருக்கும் தமிழருக்கும் அபிப்பிராய பேதம் அகலிக்கத் தொடங்கியது. அந்தக் காலத்திலே முற்போக்குள்ளம் படைத்த பலர் தேசிய உறவை உருவாக்கப் பெரிதும் உழைத்தார்கள். அவர்களுள் மாதர் சங்கத்தினர் செய்த முயற்சியைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. திருவாட்டி எஸ்.சி. போல் அம்மையார் முயற்சியால் ஆரம்பிக் கப்பட்ட மாதர் சங்கத்தில் அவர்கள் வீட்டுப் பிரச்சினைகளோடு நில்லாது நாட்டுப் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் பேசத் தலைப்பட்டனர். இன, மத,மொழி வேறு பாடுகளற்ற தேசிய மனப்பான்மைக்காக அவர்கள் உழைத்தார்கள். பாண்ஸ் பிளேஸ் என்ற இடத்தில் திருவாட்டி நடராசா உபகரித்த இல்லத்தில் அவர்கள் கூடினார்கள். பின்னர் கின்சிலி வீதியில் கூடி தேசிய ஒருமைப்பாட்




டுக்காக உழைத்தார்கள்.

டிவன்சயர் மனிங் திருத்தத்தின் வண்ணம் அமைந்த சட்டசபையில் 1924 ஆம் ஆண்டில் இருந்து தெரியப்பட்ட பிரதிநிதிகள் 23பேருள் எண்மர் தமிழராய் இருந்தனர். ஆனால் டொனமூர் அமைப்பில் ஏற்பட்ட அரசாங்க சபையில் 1934 ஆம் ஆண்டிலே (யாழ்ப்பாணத் தொகுதிகளில் இடைக்காலத்

**க.சி.குலரத்தினம்**

தேர்தல் நடைபெற்ற பின்னர்) சபையில் இருந்து தெரியப்பட்ட பிரதிநிதிகள் 50 பேருள் 38 சிங்களவரும் 7 தமிழரும் இருந்தமை அவர்கள் முன்னர் வகித்து வந்த பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தமையைக் காட்டுகிறது. சிங்களவர் தொகையில் அவர்கள் தொகை ஐந்தில் ஒன்றிலும் குறைவாகவே இருந்தது. (முற்றும்)





*கோப்பாய் லயன்ஸ் கழகமும் யாழ் கல்வி வலயமும் இணைந்து அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடாத்திய விசேட ஆங்கிலப் பயிற்சிப் பட்டறையை சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சுகாதார இணைப்பாள் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதை 1வது படத்திலும் பிராந்திய தலைவர் லயன் வி. ஸ்ரீ பிரகாஷ் ஆங்கிலப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களை பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (134)*

# சமூக நிறுவனங்களுக்கான நிர்வாகமும் முகாமைத்துவமும்

பொறுப்புக்கள் அங்கத்தவர் மத்தியில் பகிர்ந்து கொள்ளப்படும் போது பல விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.



1. (வேலை) கொடுக்கப்பட்ட நபர் அதைச்செய்வதற் கான அறிவும் திறனும் உடையவரா?
2. இதற்கு முன்னர் இவ்வாறான வேலைகளைச் செய்துள்ளாரா?
3. குறிக்கப்பட்ட நேரத்தில் வேலையை முடிக்கக் கூடியவரா?
4. கொடுக்கப்பட்ட கடமையைச் செய்வதில் போதுமான ஈடுபாடு உடையவரா?
5. வேலையைச் செய்வதற்கு ஏதாவது உதவி தேவைப்படுமா?

எனவே மேற்கூறிய அளவுகோள்களை கருத்தில் கொண்டு ஒவ்வொரு வேலையும் அங்கத்தவர் மத்தியில் பகிரப்பட வேண்டும். உதாரணம் கணக்குப் பதிவுகள் மற்றும் நிதி முகாமைத்துவம் பொருளாளருக்கும் செயலக வேலைகள் செயலாளருக்கும், நிதி திரட்டும் வேலையாளுக்கென நியமிக்கப்பட்ட உப குழுக்களும், கடன் பெற்றோரிடம் இருந்து கடனை மீளப் பெறல் அதற்கென நியமிக்கப்பட்ட உப குழுவிற்கும் பகிர்ந்து வழங்கப்படும். அதே நேரத்தில் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பொருளாளர் செயலாளருக்கோ அல்லது செயலாளர் பொருளாளருக்கோ உதவவும் முடியும்.

**வேலைப் பகிர்வின் பயன்கள்**

வேலைப்பகிர்வின் மூலம் அமைப்பிற்கு பல நன்மைகள் உள்ளன.

1. வேலைப் பகிர்வு மூலம் வேலை கொடுக்கப்பட்டவர் குறிப்பிட்ட விடயத்தில் விசேட நிபுணத்துவம் பெறுவதால் குறித்த நேரத்தில் வேலையை விரைவாக முடிக்கலாம். இதனால் முழு வேலையையும் விரைவாகச் செய்து முடிக்கலாம்.
2. ஒவ்வொரு குறித்த வேலையில் நிபுணத்துவம் பெறுவதனால் செய்யப்படும் வேலையும் தரமானதாக இருக்க சந்தர்ப்பம் அதிகமாகும்.
3. மறுபுறத்தில் இந்த நடைமுறையின் கீழ் ஒவ்வொருவரும் தாங்கள் ஈடுபடும் குறித்த ஒவ்வொரு துறைகளில் நிபுணர்களாவதனால் அவர்கள் அமைப்பிற்கு நிரந்தரமான மனிதவளம் ஆவார்கள்.
4. சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் வெளியாருக்கு பயிற்சி வழங்குபவர்களாக செயற்படுவதோடு குறிப்பிடத்தக்க வருமானத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.
5. இது அங்கத்தவர்கள் மத்தியில் ஒருமைப்பாட்டையும் ஒன்றாக வேலை செய்யும் உணர்வையும் அதிகரிக்கச் செய்யும்.

**வேலைப் பகிர்வில் ஏற்படும் தடைகள்.**

வேலைப்பகிர்வு எவ்வாறு அமைப்பிற்குத் தேவைப்படுகிறது என்பதனையும் வேலைப் பகிர்வின் நன்மைகளையும் நாம் பார்த்தோம். அதே நேரத்தில் வேலைப்பகிர்வினால் சில பாதகமான விளைவுகளும் ஏற்படலாம்.

1. ஒரு விடயத்தில் ஒருவர் விசேட திறன் பெறுவதால் அவர் இல்லாதவிடத்து முழு வேலையும் ஸ்தம்பித்து விடுவதற்கான சாத்தியம் உள்ளது. உதாரணமாக பொருளாளர் மட்டுமே நிதி அறிக்கையை சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்படலாம். இது அவர்கள் கடந்த காலங்களில் பெற்ற நற்பெயரைப் பாதிக்கும்.
2. விசேட திறன் உடைய ஒருவர் அமைப்பை விட்டு வேறு தொழிலை நாடி விலகிச் சென்றால் அவ்விடம் நிரப்பப்படும் வரை அமைப்பில் ஒரு தேக்கநிலை ஏற்படும்.

ஒரு நிறுவனத்தின் வேலைப்பகிர்வை முறையாகச் செய்யப்படுவதற்கு குறித்த நிறுவனம் முறையான நிறுவனக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்ய வேண்டும். (அலகு 2 இன் கீழ் நிறுவன கட்டமைப்பினை விருத்தி செய்வதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.)

**நிலையான ஊழியர்கள், தொண்டர்களை நியமித்தல்**

ஆரம்ப வட்டத்தில் நிலையான உத்தியோகத்தர்களை வைத்திருப்பதற்கான அவசியமில்லை. கொடுப்பனவு கொடுப்பதும், நிறுவனங்களுக்கு இயலாத விடயம். அனேக நேரங்களில் அங்கத்தவர்களே தொண்டு அடிப்படையில் சேவை ஆற்றுவர். இந்நேரங்களில் அங்கத்தவர் வாரம் ஒரு முறை அல்லது இருமுறை குறுகிய நேரம் சந்தித்து கலந்து உரையாடுவர்.

ஒரு வேலையை பூர்த்தி செய்ய வேண்டிய நேரங்களில் மட்டுமே அதிக நேரத்தைச் செலவிடுவர். எவ்வாறாயினும் சமூக அடிப்படை நிறுவனங்களின் வளர்ச்சியோடு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முழு நேர ஊழியர்கள் தேவைப்படும் ஒரு கட்டத்தை அமைப்பு அடையும். உதாரணமாக ஒரு மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கம், சேமிப்பு, சிறுகடன் திட்டத்தினை அங்கத்தவர் மத்தியில் அறிமுகப்படுத்தினால், நீண்ட நேரத்திற்கு அலுவலகத்தை திறந்து வைத்திருக்க வேண்டிய தேவையினால் ஒரு முழு நேர ஊழியரை

6

நியமிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

அங்கத்தவர் பகுதி நேர சேவையாற்றும் போது நிறுவனத்திற்கென முழு நேர ஊழியர்களை நியமிக்கவோ அவர்களுக்கு ஊதியம் செலுத்துவது தொடர்பாக வருமானப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவோ வேண்டியதில்லை. ஆனால் எங்களுக்கு முழு நேர ஊழியர் தேவைப்படும் போது நீண்ட காலத்திற்கு அவ்வேலையை தொண்டர்களைக் கொண்டு செய்விப்பது கடினமாக இருக்கும். ஆகவே நிறுவனமானது பொருத்தமான ஒருவரை முழு நேர ஊழியராக நியமிப்பது அவசியமாகும். இவ்வாறு ஒருவரை நியமனம் செய்த பின்னர் அவரின் வேலை திருப்தியாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அமைப்பானது அவருக்குப் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வகையில் கொடுப்பனவினைச் செய்யலாம்.

பொதுவாக ஆரம்பக்கட்டத்தில் இத்தொகை சிறிய உபகாரக் கொடுப்பனவாக ஐந்நூறு ரூபாவாகவோ ஆயிரமாகவோ இருக்கலாம். இது ஒரு ஊக்குவிப்போ அன்றி சம்பளமல்ல. அமைப்பின் வருமானத்தின் வளர்ச்சியோடு இத்தொகை அதிகரிக்கப்படலாம். அவ்வாறே ஒன்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கும் கொடுப்பனவு செய்யலாம்.

**தி.திருசாந்**
SOND நிறுவனம்
யாழ்ப்பாணம்

(தொடரும்)


# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## மாதிரி வினாத்தாள் - விஞ்ஞானம் - II

*(29 ஆம் திகதி வெளியான வினாத்தாளின் தொடர்ச்சி...)*


3) இங்கு மின்காந்த வலிமையை அதிகரிக்க செய்யவேண்டிய மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக? (2 புள்ளி)

II




1. தரப்பட்டது எவ்வகைப் பொறியாகும் ? (1 புள்ளி)
2. சுமைப்புயம், எத்தனப் புயம் என்பவற்றின் நீளங்களைக் குறிப்பிடுக? (2 புள்ளி)
3. கைபிடியில் 60N விசை பிரயோகிக்கப்பட்டால் பொருள் தாக்கும் விசையின் அளவு யாது? (2 புள்ளி)


III வளியில் பொருளின் நிறை 200N ஆகும். நீரில் அமிழ்ந்த போது தராசின் வாசிப்பு 120N ஆகும்.



1. தோற்றநிறைக் குறைவு யாது? (1 புள்ளி)
2. பொருளின் மீது மேலுதைப்பு யாது? (2 புள்ளி)
3. இடம்பெயர்க்கப்பட்ட நீரின் நிறை யாது? (2 புள்ளி)
4. இப்பொருள் மிதக்க வேண்டுமானால் மேற்படி அளவீடுகளில் எத்தகைய மாற்றம் நிகழவேண்டும்? (1 புள்ளி)

### இரசாயனவியல்

1) A)




$\Delta H = H_1 + H_2 + H_3$ எனில்

1. இங்கு காட்டப்பட்ட சக்தி வரிப்படத்தின் படி தாக்கத்தின் இறுதிச்சக்தி $\Delta H$ யாது? (2 புள்ளி)
2. இத்தாக்க இறுதியில் சூழலுக்கு சக்தி விடுவிக்கப்படுமா? (1 புள்ளி)
3. H-Cl பிணைப்பு உருவாகும் போது வெளிவிடப்படும் சக்தியின் அளவு யாது? (2 புள்ளி)

B)

1. சிலிக்கன் ஈரொட்சைட் காணப்படும் கனிப்பொருள் எது? (1புள்ளி)
2. மண்ணில் காணப்படும் கனியக்கூறுகள் மூன்றைக் குறிப்பிடுக? (2 புள்ளி)
3. அடையற்பாறை வகைகள் இரண்டைக் குறிப்பிடுக? (1புள்ளி)
4. உயிர் இரசாயன ஊக்கி ஒன்றின் பெயர் தருக? (1 புள்ளி)

C)

1. செப்பு சல்பேற்றுக் கரைசலுக்குள் மக்னீசிய நாடாவை இடும் போது பெறக்கூடிய இறுதி அவதானங்கள் இரண்டு தருக? (2 புள்ளி)
2. அதற்குரிய சமன்பாட்டை எழுதுக? (1 புள்ளி)
3. அதன் குறியீட்டைத் தருக? (2 புள்ளி)

2) A)

1. அலுமினியம் ஒட்சைட்டின் குறியீட்டை எழுதுக? (2 புள்ளி)
2. $_{13}Al$ என அலுமினியம் நியமக்குறியீட்டில் எழுதப்படுகிறது. இதன் இலத்திரன் நிலை அமைப்புக்களை எழுதுக? (1 புள்ளி)
3. அலுமினியத்தின் சாரணுத்திணிவு 27 என்பதால் யாது விளங்குகின்றீர்?(2 புள்ளி)
4. மூலகமொன்றின் அணுக்கருவில் அடங்கி உள்ள கூறுகள் எவை? (1 புள்ளி)

B)

1. ஒட்சின் வாயுவில் காணப்படும் பிணைப்பு வகையைக் குறிக்கும் குற்று புள்ளடிப்படத்தை வரைக? (2 புள்ளி)
2. அவ்வகைப் பிணைப்பின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக? (2 புள்ளி)
3. சேர்வை ஒன்றின் உருகுநிலை -7°C / கொதிநிலை 59°C எனில் அது அறைவெப்பநிலையில் எப்பௌதீக நிலையில் காணப்படும்? (1 புள்ளி)


C)

1. காபன்நாற் குளோரைட்டுப் பயன்படும் சந்தர்ப்பம் ஒன்று தருக? (1 புள்ளி)
2. இது எக்கரைப்பான் வகையைச் சேர்ந்தது? (1 புள்ளி)
3. அயடினைக் கரைக்கப் பயன்படும் கரைப்பான் எது? (1 புள்ளி)
4. குறித்த திணிவு வாயுவின் அமுக்கம் 76cm Hg அதன் கனவளவு 600cm³ வெப்பநிலை மாறா நிலையில் இருக்கும் போது அதன் அமுக்கத்தை 152kmHg ஆகமாற்றினால் அதன் கனவளவு யாது? (2 புள்ளி)

### உயிரியல்


01)

அ) சுற்றாடலில் காணப்படும் உணவு வலை ஒன்றின் ஒரு பகுதியை இப்படம் காட்டுகின்றது.




1. இவ் வலையின் எப்பகுதி தற்போசணிகள் ஆகும்? (1 புள்ளி)
2. இவ் அங்கிகளில் அதிக தொகையில் காணப்படும் அங்கிகள் எவை? (1 புள்ளி)
3. இச்சுற்றாடலில் யாதாவது ஒரு காரணத்தால் தவளைகள் அழிந்தால் பெருக்கமடையும் விலங்குகள் எவை? (1 புள்ளி)


1) பப்பாசிக் குழாய் ஒன்றுடன் கண்ணாடிக் கோல் செருகப்பட்டு படத்தில் உள்ளவாறு நீருள்ள முகவையில் வைக்கப்பட்டது. குழாயினுள் செறிந்த உப்புக்கரைசல் எடுக்கப்பட்டது.




1. நீர் பெறக்கூடிய அவதானம் யாது? (2 புள்ளி)
2. இதற்கு காரணமான செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்? (2 புள்ளி)
3. எமது உடலில் எச்செயற்பாடு இம்முறை மூலம் நடைபெறுகிறது? (1 புள்ளி)
4. இதன் வினைத்திறனை அதிகரிக்க பப்பாசிக் குழாயில் செய்யப்பட வேண்டிய செயற்பாடு யாது? (2 புள்ளி)

2)


அ)




*காதின் புறவரிப்படம் தரப்பட்டுள்ளது..*

1. பகுதிகள் A,B,D என்பவற்றை இனம் காண்க? (2 புள்ளி)
2. இருகாதுகள் இருப்பதன் நன்மை யாது? (2 புள்ளி)
3. பகுதி C யின் பிரதான தொழில் யாது? (2 புள்ளி)

ஆ) சாடித்தாவரம் ஒன்று இருட்டறையில் வைக்கப்பட்டு பரிசோதனைக் குழாய் ஒன்று படத்தில் உள்ளவாறு பொருத்தப்பட்டது. ஒளித்தொகுப்பிற்கு $Co_2$ அவசியம் எனக்காட்ட இம்மாணவர் குழு விரும்பியது.




1. இப்பரிசோதனைக்கான எடுகோள் ஒன்றைக் குறிப்பிடுக? (2 புள்ளி)
2. இராசயனப் பதார்த்தம் A யாதாக இருக்க வேண்டும்? (1 புள்ளி)
3. தாவரம் இருட்டில் வைக்கப்பட்ட காரணம் யாது? (2 புள்ளி)

இ) வெங்காய உரிப்பு ஒன்றை நுணுக்குக் காட்டியின் உயர்வலுவில், மாணவர் குழு ஒன்று அவதானித்தது.

1. இச்செய்கையில் அவர்கள் நன்றாக அவதானிக்கும் கலப்புன்னங்கம் எது? (1 புள்ளி)
2. இக்கலத்தின் கட்டமைப்பு கன்ன உரியின் கலக்கட்டமைப்பில் இருந்து எவ்விதம் வேறுபடுகிறது? (2 புள்ளி)
3. மேற்தோற் கலங்களில் பச்சைய உருமணிகள் இல்லாதிருப்பதற்கான காரணம் யாது? (2 புள்ளி)

# ஆசிரியர் நியமனம் பெறுவோருக்கான பாடசாலைகளின் விபரம் வெளியீடு

(29.11.2008 இன் தொடர்ச்சி)

க.தமிழ்ச் செல்வன்- கன்னாட்டி அ.த.க. பாடசாலை, செல்வி வி.பாமினி–கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம். செல்வி ச.கலைவாணி– பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயம், செல்வி ஜெ.சர்மினி கந்தபுரம் வாணி வித்தியாலயம், செல்வி அ.பாஹிமா– ஆண்டியா புளியங்குளம் அ.மு.க.பாடசாலை.

செல்வி சி. சிவாஜினி – கூமாங் குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம், ந.திலகராசன் - பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயம், தி. அன்பரசு– திருஞானசம்பந்தர் வித்தியாலயம், ம.ஜெயப்பிரகாஷ்– வஃஸ்ரீ நாகராஜா வித்தியாலயம், திருமதி க. துர்க்கா – அறபா வித்தியாலயம், தி.செல்வகஜானன்– கன்னாட்டி அ.த.க.பாடசாலை, திருமதி லோ.விஜிதா– பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயம், க.கருணாகரன்– பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயம்.

செல்வி வீ. மிதுலா– கந்தபுரம் வாணி வித் தியாலயம், தே. பகீதரன்– பெரிய கோமர சங் குளம் மகாவித்தியாலயம் , திருமதி கு. செல் வரஞ்சிதம்–கூமாங்குளம் சித்திவிநா யகர் வித்தியாலயம், திருமதி ச.சிவகௌரி– கூமாங் குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம்.

செல்வி கா. தயாளினி– கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம், க. சுவீதன்– கந்த புரம் வாணி வித்தியாலயம், செல்வி ம.ஆன் சுவீனி– வஃஸ்ரீ நாகராஜா வித்தியாலயம், மா. ஜெயசொரூ பன்– அண்ணாநகர் பரமேஸ் வரா வித்தியாலயம்.

ச.முஹாஜிரின் - கிறிஸ் தோக்குளம் அ.த.க பாடசாலை, இ. விஜேந் திரன் - வஃஸ்ரீ நாகராஜா வித்தியாலயம், கு.சசீகுமார் –திருஞானசம் பந்தர் வித்தியால யம், செல்வி ச. நிசாந்தினி –பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயம்,லோ. ரஞ்சித் மனோகரன்– கன்னாட்டி அ.த.க.பாட சாலை, செல்வி தி. துஷாமினி –திருஞானசம்பந்தர் வித்தியாலயம், திருமதி வா. சிவந்தினி– வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம், ஏ.சுதர்ஸ்– தாருள் உலூம் முஸ்லிம் வித்தியாலயம், செல்வி ச. வாசுகி– குருக்கள் புதுக்குளம் அ.த.க. பாடசாலை, ச.ஜயக்குமரன்– கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம், செல்வி து.தவரூபி– கந்தபுரம் வாணி வித்தியாலயம்.

செல்வி க.கௌரி– வஃஸ்ரீநாகராஜா வித்தியாலயம்,செல்வி சி. சுமித்தா –பாவற்குளம் கணேஸ்வரா மகாவித்தியாலயம் , திருமதி நா. வாசுகி– இலுப்பைக்குளம் றோ.க.த.க பாடசாலை, செல்வி க.நிஜா பெரிய கோமரசங்குளம் மகாவித்தியாலயம், செல்வி க.சுகிதா –பாவற்குளம் கலைமகள் மகாவித்தியாலயம், செல்வி பொ.வளர்மதி கணேஷபுரம் விநாயகர் வித்தியாலயம், சி. பரணிதரன் - வஃஸ்ரீநாகராஜா வித்தியாலயம், செல்வி டே.வத்சலா– கோவில் புளியங்குளம் மூத்தமிழ் வித்தியாலயம்.

பொ. சிவரஞ்சன்– கிடச்சூரி– கருவேப்பங்குளம் அ.த.க. பாடசாலை, கு.மோகன சிவா– சுந்தபுரம் சரஸ்வதி வித்தியாலயம், செ. ஜெயசங்கர் - சுந்தபுரம் சரஸ்வதி வித்தியாலயம்,பெ.ஸ்ரீகந்தநேசன் –சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை, ச. இலங்கேஸ்வரன் - மாதர் பணிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை, செல்வி. க. சுகர்ணா - கனகராயன் குளம் மகாவித்தியாலயம், கா.திருமகன் - புதுக்குளம் மகா வித்தியாலயம், செல்வி. க. சயிந்தினி - புதுக்குளம் மகாவித்தியாலயம், செல்வி இ. நிர்மலாதேவி - தரணிக்குளம் கணேசா வித்தியாலயம், இ. இரத்தினகுமார் - தவசியாகுளம் அ.த.க. பாடசாலை.

செல்வி. ஜே. சரோமினா - தரணிக்குளம் கணேசா வித்தியாலயம், செல்வி சி. சாம்பவி - தரணிக்குளம் கணேசா வித்தியாலயம், செல்வி. செ. அலோஜினி - புதுக்குளம் மகா வித்தியாலயம், அ.அப்துல்கபீர் - தவ சியாகுளம் அ. த. க. பாடசாலை, செல்வி. இ. பபிந்தினி - கோயில்குஞ்சுக்குளம் வித்தியாலயம், க.ப.சிவநேசன் - கோயில் குஞ்சுக்குளம் வித்தியாலயம், திருமதி. கி. தயாளினி - கோவில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம், செல்வி. ந. சியாமினி - சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை, செல்வி. க. சுலோசனா– புளியங்குளம் இந்துக் கல்லூரி, செல்வி. இ. விஜிதா - சண்முகானந்தா வித்தியாலயம், ம. பிரசாந்தன் - பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை, சோ. இராகுலராஜ் - (வேடர்) மாதர் பணிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை, திருமதி சி. விஜிதா - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், து. கோணேஸ்வரன்- கிடாய்ச்சூரிகரு வேப்பங்குளம் அ.த.க. பாடசாலை, ச. கஜனன்- மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்.

செல்வி. அ. கிருஸ்சாந்தினி - தரணிக்குளம் கணேசா வித்தியாலயம், த. துளசிகரன் - பூம்புகார் கண்ணகி வித்தியாலயம், செல்வி. இ.சிவகாமி - கல்மடு படிவம் 01 அ.த.க. பாடசாலை, இ. ராஜ்குமார் - தவசியாகுளம் அ.த.க. பாடசாலை, சி. பாவலன் - கல்மடு படிவம் 01 அ.த .க. பாடசாலை, செல்வி. சி. சுங்கீதா - ஓமந்தை மத்திய கல்லூரி, செல்வி. இ. துரேஸ்வரி - மதியாமடு விவே கானந்தா வித்தியாலயம், செல்வி. செ. பிருந்தா - பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்.

சி.கணேசதாஸ் - தரணிக்குளம் கணேசா வித்தியாலயம், சீ. சிவச்செல்வன்–சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை, திருமதி. ச.சுபாஜனா – ஓமந்தை மத்திய கல்லூரி, நா.ச்ந்திரகுமாரன் – உருத்திரபுரம் மகா வித்தியாலயம், வண. அருட்சகோதரி ஜெயசீலி சிங்கராசா - முழங்காவில் மகா வித்தியாலயம், திருமதி. ஜோ. தயாழினி - பூநகரி நல்லூர் அ.த.க. பாடசாலை, திருமதி. தி.அனுசுயா - தரும புரம் மகா வித்தியாலயம், த. கஜேந்திரன் - வட்டக்கச்சி மகாவித்தியாலயம், திருமதி.வி.கமலினா - பன்னக்கண்டி இ.த.க. பாடசாலை, அ. தேவகரன் - தருமபுரம் மகா வித்தியாலயம்.

சா. நிமலன் - கிளிநொச்சி மகாவித்தியாலயம், திருமதி. ஜெ.சிவாஜினி – கிளிநொச்சி இந்துக்கல்லூரி, ஜெ. சிறீரங்கன் - வேரவில் இந்து மகா வித்தியாலயம், இ. சந்திரகுமார் - கனகாம்பிகை குளம் அ.த.க. பாடசாலை, ஆ. கேசவானந்த மூர்த்தி - சிவ பாதகலையகம் அ.த.க. பாடசாலை, திருமதி. அ. ஜெயந்தினி – முழங்காவில் மகாவித்தியாலயம், ஆ. வினோதன் - திருவையாறு மகா வித்தியாலயம், திருமதி. சோ. சுபதர்சினி - அக்கராயன் அ.த.க. பாடசாலை, திருமதி. சு. ஜமுனா – பூநகரி நல்லூர் அ.த.க. பாடசாலை, திருமதி. கெ. சுதர்சினி – இராமநாதபுரம் மகாவித்தியாலயம், ம. அநுகரன் – உருத்திரபுரம் மகாவித்தியாலயம், சு.லோகேஸ்வரன் - திருவையாறு மகா வித்தியாலயம், செல்வி. த. றஜனி - அக்கராயன் மகாவித்தியாலயம்.

க.சந்தரபவான் - பூநகரி நல்லூர் அ.த.க. பாடசாலை, ப. விஜயதாஸ் – திருவையாறு மகா வித்தியாலயம், திருமதி. உ. பிறேமளா – கிளிநொச்சி இந்துக்கல்லூரி, திருமதி. ஜெ. குமுதினி - சிவபாதகலையகம் அ.த.க. பாடசாலை, செ. அருட்குமரன் – வட்டக்கச்சி மகா வித்தியாலயம், செல்வி ம. வளர்மதி–கிளிநொச்சி இந்துக்கல்லூரி, க. நாகசுதீஸ் வரன் – கிளிநொச்சி இந்துக்கல்லூரி, ப. தேவேந்திரகுமார் - கனகபுரம் மகா வித்தியாலயம்

வி. சசிகரன் - அக்கராயன் மகா வித்தியாலயம், திருமதி. ச. யூடித் அருள்மலர் – கனகபுரம் மகாவித்தியாலயம், திருமதி அ. சந்திரிகா - இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, வே. அருள்ராசா – வட்டக்கச்சி மகா வித்தியாலயம், திருமதி. வி. மேன கா – உருத்திரபுரம் மகா வித்தியாலயம்.

அ. இராமலிங்கம் - கிளிநொச்சி இந்துக்கல்லூரி, செல்வி. பொ. சிவாஜினி – கிராஞ்சி அ.த.க. பாட சாலை, திருமதி. கே. கவிதா - இராமநாத புரம் மேற்கு அ.த.க. பாடசாலை, வி. சண் முகராசா - தருமபுரம் மகா வித்தியாலயம், செல்வி. இ. காயத்திரி – கிளிநொச்சி இந்துக் கல்லூரி, ஸ். அன்ரன் றெனோ– அக்கராயன் மகா வித்தியாலயம்.

திருமதி செ. வைதேகி – அக்கராயன் மகா வித்தியாலயம், சி. பிரபாகரன் – சிவநகர் அ.த.க. பாடசாலை, அ. தினேஸ்குமார் - கிளிநொச்சி இந்துக்கல்லூரி, திருமதி. ஸ்ரீ. ஜெயா – அக்கராயன் மகா வித்தியாலயம், ப. நிஷாந்தன் - பிரமந்தனாறு மகா வித்தியாலயம், மு. கயூகரன் - அக்கராயன் மகா வித்தியாலயம், திருமதி. மு. அனோஜியா - கிளிநொச்சி இந்துக்கல்லூரி, செல்வி. நா. சாயிதர்ஷினி - இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை, திருமதி. தீ. மதனா - கனகபுரம் மகா வித்தியாலயம்.

க.கோடீஸ்வரன் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, க. பிரதீபன் - கறுக்காய்தீவு அ.த.க. பாடசாலை, ச. நவநீசன் - கண்டாவளை மகா வித்தியாலயம், ம.மதிதாஸ்–மாசார் அ.த.க. பாடசாலை, கி. குகதாசன்–கண்டாவளை மகா வித்தியாலயம், க. வைகுந்தராஜா – உருத்திரபுரம் மகா வித்தியாலயம், க. சசிகரன் - ஜெயபுரம் அ.த.க. பாடசாலை , செல்வி. பா. பொபிதா - அக்கராயன் மகா வித்தியாலயம், செல்வி நா. செல்வதர்சினி – தருமபுரம் மகா வித்தியாலயம்.

திருமதி. லோ. போதினி – தருமபுரம் மகா வித்தியா லயம், வே. சசிகரன் - கோவில்வயல் சீ.சீ. த.க. பாடசாலை, தெ. விஷ்ணுதாஸ் - இரணை தீவு றோ.க.த.க. பாடசாலை, செல்வி.கி. சிவ கலா - முகாவில் அ.த.க. பாடசாலை, அ. விஜய மகலன் அல்பிறெட் – கனகபுரம் மகாவித்தி யாலயம், திருமதி. கா.ஜெயந்தி - இராமநாத புரம் கிழக்கு அ.த.க. பாடசாலை, செல்வி. இ. ஜீவப்பிரியா - திருவையாறு மகாவித்தியால யம், வண. அ. இம்மணுவேல் - அக்கராயன் மகா வித்தியாலயம், செல்வி. வி. கலை வாணி – கனகாம்பிகைகுளம் அ.த.க. பாட சாலை.

பா. பாலமுரளிதரன் – தருமபுரம் மகா வித்தியாலயம், திருமதி. வை. விமலராணி – பாரதி வித்தியாலயம்.த.டேவிற் கிஸ்காட் - பாரதி வித்தியாலயம், பா. நிரூபன் – கிளிநொச்சி இந்துக்கல்லூரி, செல்வி. த. மேரிரதி - அம்பலவன் பொக்கணை அ.த.க. பாடசாலை, திரு. ப. தவசீலன் - முல்லைத்தீவு மகா வித்தியாலயம், செல்வி. சு. பிரமிளா – இரணைப்பாலை மகா வித்தியாலயம்.

செ. அகிலன் - அளம்பில் றோ.க.த.க. பாடசாலை, அ. அன் ரனி பொன்பொஸ்கோ – விசுவமடு மகாவித்தி யாலயம், த. சிவகுமார் – செம்மலை மகாவித் தியாலயம், செல்வி. ந. ஷர்மிளா - முல்லைத் தீவு றோ.க.த.க. பாடசாலை, திருமதி. ற. ஜெியதீபா - மாத்தளன் றோ.க.த.க. பாடசாலை, திரு. க. சுதாகரன் - வேணாவில் ஸ்ரீ முருகா னந்தா வித்தியாலயம், திரு. சி.சிவகுமார் - பாரதி வித்தியாலயம்.

செல்வி. அ. கோகில வதனி - வள்ளிபுனம் கனிஸ்ட இடைநிலை வித்தியாலயம், திரு. அ. டில்ஷான்பிலிப் - உடையார்கட்டு மகா வித்தியாலயம், செல்வி. ம. மாலினி - வள்ளிபுனம் கனிஸ்ட இடை நிலை வித்தியாலயம், செல்வி. க. தனுஷா - விசுவமடு மகா வித்தியாலயம், செல்வி க. கமலஜோதி –குமுழ முனை மகாவித்தியாலயம், திருமதி. வி. நந்தினி - விசுவமடு மகா வித்தியாலயம், திரு. அ.சுதர்சன் - விசுவமடு மகா வித்தியாலயம், திரு. செ. செல்வக்குமார் - முல்லைத்தீவு மகாவித்தியாலயம்.

பொ. ஆறுமுகரஞ்சன் - பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், ம. மதனமோகன் - பாலிநகர் மகா வித்தியாலயம், திருமதி. கு. கிருபாரஞ்சினி - மல்லாவி மத்திய கல்லூரி, திருமதி. த . சுபாசினி – ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், சூ. பரமே ஸ்வரி – மாங்குளம் மகா வித்தியாலயம்.

செல்வி. சி. ரஞ்சனா – மல்லாவி மத்திய கல்லூரி, செல்வி. இ. தர்சினி – ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், திருமதி. ஒ. மலர்விழி – ஒதியமலை அ.த.க. பாடசாலை, ஜெ. ஜெயநேசன் - கற்சிலைமடு அ. த.க. பாடசாலை, செல்வி. ந. நிரோகினி - பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், ஐ. ஆஷிக் - புதுக்குடியிருப்பு அ.மு.க. பாடசாலை, செல்வி. அ. சரீனா பேகம் - சிலாவத்துறை அ.மி. முஸ்லிம் பாடசாலை.

திருமதி. அலாவுதீன் அர்ஷதா பேகம் - புதுக்குடியிருப்பு அ.மு.க. பாடசாலை, எ.ஞானசீலன்– தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை, செல்வி ஆ.டயானா - கரிசல் றோ.க.த. பாடசாலை , திருமதி. இ.அமுதா சில்வா - உயிர்த்தராசன் குளம் றோ.க.த. பாடசாலை. திருமதி. நி. மேரி டொலறோஸ் சோன - வஞ்சியன்குளம் றோ.க.த.க. பாடசாலை, திருமதி. அ.றோசி எனட் டலிமா - கரிசல் றோ.க.த.க. பாடசாலை, செல்வி. ம. ஷர்மிலா - அரிப்பு றோ.க.த.க. பாடசாலை, திருமதி. யூ. நிரோஷா டிவ்னா டலிமா – கரிசல் றோ.க.த.க. பாடசாலை.

செல்வி. தே. ஜெயதர்சினி – நறுவிலிக்குளம் அ.த.க. பாடசாலை, சூ. லாசறஸ் பிள்ளை - இலகடிப்பிட்டி றோ.க.த.க. பாடசாலை, ச. லோகு எமில்ராஜ் – சூரியகட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை, செ.டபரேரா நீதிராஜ் - மாவிலன்கேணி. றோ.க.த.க. பாடசாலை.

திருமதி. டெ.எமற் எலிஸ்மேரி - தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை, ம.அன்ரன் ஜெயசீலன்- சூரியகட்டைக்காடு றோ. க. த. க. பாடசாலை, செல்வி. நீ. சுதர்சினி டயஸ் - தலை மன்னார் பியர் அ.த.க. பாடசாலை, திருமதி.ட.ஸ்ரனி மேரி றொனிற்றா- மாவிலன் கேணி. றோ. க.த.க. பாடசாலை, கி. பீரிஸ் அன் ரன்யூட் – அரிப்பு றோ.க.த.க. பாடசாலை, செல்வி.ம. மருதவாணி – சூரியகட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை.

திருமதி. கி.மதுமதி - உயிர்த்தராசன் குளம் றோ.க.த. பாட சாலை, செல்வி. செ. அனுஷா – ஓலைத் தொடுவாய் றோ. க.த.க. பாடசாலை, செல்வி. கொ. நிலோஜி – கௌரி அம்பாள் அ.த.க. பாடசாலை, திரு. ச. அகிலன் - பண்டாரவெளி அ.மு.க. பாட சாலை, திருமதி. க. நகுலேஸ்வரி – சென் லோறன்ஸ் றோ.க.த.க. பாடசாலை.

திருமதி. ஜெ. கஜந் தினி – தலைமன்னார் பியர் அ.த.க. பாட சாலை, செல்வி. ஸ்ரீ. சிந்தாமணி – தலை மன்னார் பியர் அ.த.க. பாடசாலை, பா.பாஸ்கர் - அரிப்பு றோ.க.த.க. பாடசாலை, க.ஸ்ரீகோபிதரன் - கௌரி அம்பாள் அ.த.க. பாடசாலை, திருமதி. ர. மேரி மஞ்சுளா - நறுவிலிக்குளம் அ.த.க. பாடசாலை.

திருமதி. ரூ. டேமிரிக்கா - வஞ்சியன் குளம் றோ.க.த.க. பாடசாலை, செல்வி. சி. ரேவதி – கௌரி அம்பாள் அ.த.க. பாடசாலை, செல்வி. ம. லெம்பேட் மரிய கிறிஸ்ரா – கருங்கண்டல் றோ. க.த.க. பாடசாலை, இ. அம்பிகைபாலன் - தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலயம்.

திருமதி. சி. சுகந்தினி – அடம்பன் மத்திய மகா வித்தியாலயம், அ. பிறின்சிற் குணாளன் – அடம்பன் மத்திய மகா வித்தியாலயம், திருமதி. இ. தவானி – வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலை, இ. பாலமுரளி - தூய ஜோசப்வாஸ் மகா வித்தியாலயம், செல்வி. யே. ஜெனிற்றா - பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம்.

தே. ஜேசுதாசன் – அடம்பன் மத்திய மகா வித்தியாலயம், ம. மகாதீபன் – அடம் பன் மத்திய மகா வித்தியாலயம், ந. கிசோக் குமார் - பெரிய பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயம்.

(முற்றும்)

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

**06.12.2008 முதல் 08.12.2009 வரை**

## கன்னி

உத்ரம் 2,3,4 பாதங்கள் அத்தம், சித்திரை 1, 2 பாதங்கள்

(பெயரின் முதல் எழுத்துக்கள் ப, பி,பூ, ஷ, ண, ட, பே, போ உள்ளவர்களுக்கும்)

### அதிர்ஷ்ட வாய்ப்புகள் அடுக்கடுக்காக வந்து சேரும்!

திட்டம் போடுவதிலும் அதைச் செய லாக்குவதிலும், வல்லவர்களாக விளங்கும் கன்னி ராசி அன்பர்களே !

குருப் பெயர்ச்சி வந்து குதூகலம் தருமா என்று நினைத்த உங்களுக்கு டிசம்பர் 6ஆம் திகதி முதல் அதிர்ஷ்டக் காற்று வீசப் போகிறது. பட்டபாட்டிற்கெல்லாம் விமோசனம் கிடைத்து விட்டதே என்று மகிழப் போகிறீர்கள் ஏழரைச்சனியின் ஆதிக்கத்தால் எத்தனை தொல்லைகள், எத்தனை இடர்பாடுகள், குடும்பத்திலும் நிம்மதி இல்லையே என்று ஏங்கிய உங்களுக்கு இனி மிகப் பெரிய மாற்றங்கள் வந்து சேரப் போகின்றன.

குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் ஒவ்வொரு நாளும் இனித் திருவிழாதான் 4 , 7 க்கு அதிபதியான குரு நீச்சம் பெற்றுப் பார்ப்பது சிறப் பானதாகும். பார்க்கும் குருவால் பல விதங்களிலும் நற் பலன்கள் வந்து சேர குருப்பெயர்ச்சிக்கு முன்னதாகவே குருப்பீரிதி செய்வது நல்லது. குறிப் பாக சான்றோர்களின் வாழ்த்துக்களைப் பெறுவதும் ஹோமங்களில் கலந்து கொள்வதும் , இயன்ற அளவு அன்னதான கைங்கரியங் களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதும் யோக வாய்ப்புக்களை வரவழைத்துக்கொடுக்கும்.

### வரவறிந்து செலவு செய்வதில் வல்லவர்கள்!

பழைய சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை வைப்பதில் வல்லவர்கள் நீங்கள். யாருக்கும் எந்த விதத்திலும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது என்ற எண்ணம் இயற்கையிலேயே பதிந்திருக்கும். வெளியுலகிற்கு சிக்கனமானவரைப்போல தோற்றமளித்தாலும் வரவறிந்து செல்வு செய்வீர்கள். மற்றவர்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெற உங்களது மறைமுக யோசனைகள் உதவியாக இருக்கும்.

திருமண வாழ்க்கை உங்களுக்கு சிறப் பாக இருக்க வேண்டுமானால் தித்திக்கும் விதத்தில் பொருத்தங்கள் அமைய வேண்டும். அப்பொழுது தான் குடும்பத்தில் அமைதியும் கூட இருக்கும். வாழ்க்கைத்துணையால் நிம்மதியும் ஏற்படும். நீங்கள் பிறருக்கு எவ்வளவு உதவிகள் செய்தாலும் நன்றியை எதிர்பார்க்க முடியாது.

இப்படிப்பட்ட குணாதிசயங்களை பெற்ற உங்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி எப்படி எல்லாம் மாற்றங்களை கொடுக்கப்போகிறது என்பதை பற்றிப்பார்ப்போம்.

### முப்பெரும் பார்வையால் ஏற்படும் முன்னேற்றம்!

5ஆம்இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது ஆதரவு கரம் நீட்டுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆவல்கள் அனைத்தும் நிறைவேறுவதும் , நாவசைத்தலெல்லாம் நடந்தேறுவதும் குருவின் பார்வை பலத்தால் தான் எனவே தான் குருவின் பார்வைக்கு முக்கியத்துவ்ம் கொடுப்பார்கள்.

தேவகுரு ஐந்தில் வந்தால்
தேக நலம் சீராகும்!
ஆவல்களும் நிறைவேறும்!
ஆதரவும் அதிகரிக்கும்!
நாவசைத்தால் கேட்பார்கள்!
நாடெல்லாம் புகழ் பரவும்!
தாமதித்த திருமணமும்
தடையின்றி நிறைவேறும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தேக நலன் சீராகி தெம்போடு செயற்படுவர். எடுத்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். கொடுத்து வைத்தவர்கள் நீங்கள் என்று மக்கள் கூறுவர்.

ஐந்தாம் இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் ராசியின் மீது பதிவதோடு 9ஆம் , 11ஆம் ஆகிய இடங்களிலும் பதிகிறது. எனவே ஒளிமயமான எதிர்காலத்திற்கு அத்திவாரம் அமைத்துக்கொடுக்கப் போகிறது.

### விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!

குருவின் அருட்பார்வை பதியும் இடங்களில் எல்லாம் நல்ல பலன்கள் கிடைக்கும் என்பதை நீங்கள். அனுபவத்தில் கண்டு கொண்டிருப்பீர்கள். ஜென்ம ராசியிலும், 9, 11 ஆகிய இடங்களிலும் அதன் பார்வை பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன.தேவகுரு 5இல் சஞ்சரிக்கும் போது தேடி வந்த சிக்கல்கள் அனைத்தும் விலகும். கோடி கோடியாய் பணம் குவிக்க வாய்ப்புகள் கைகூடி வரும்.

உடல் நலத்திற்காக செலவிட்ட தொகை இனி குறையும். கணவன் -மனைவிக்குள் இருந்த கருத்துவேறுபாடுகள் அகலும். குருவின் பார்வை 9இல் பதிவதால் தந்தை வழியில் அனுகூலம் கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். உடன் பிறப்புகள் உங்கள் குரல் கேட்டு ஓடி வந்து உதவி செய்வர்.

குருவின் பார்வை 11இல் பதிவதால் வெளிநாட்டு யோகம் வந்து சேரும். சுய ஜாதகம் வலுவாக இருந்தால் தான் இது போன்ற வாய்ப்புகளை உபயோகப்படுத்தி கொள்ளலாம். இல்லையேல் பயணங்களை ஒத்தி வைப்பது நல்லது. ஏழரைச்சனியும் நடைபெறுவதால் வருமானம் எவ்வளவுதான் வந்தாலும் வந்த மறு நிமிடமே செலவாகி விடும்.

### பார்க்கும் குருவை பலப்படுத்துங்கள்!

மனிதர்களுக்கு பலம் குறைந்தால் சத்துணவு சாப்பிடுகிறோம். மருத்துவர் தினமும் ஒரு பழம் சாப்பிடச்சொல்வார். அது போல கிரகங்கள் பலமிழந்திருக்கும் பொழுது பழம் வைத்து அர்ச்சனை செய்ய வேண்டும். சிறப்பு ஸ்தலங்களுீக்கு உங்கள் ஜாதகத்திற்கு அனுகூலம் தரும் நாளில் சென்று வழிபட்டு வர வேண்டும்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

மகரத்தில் நீச்சம் பெற்ற குருவால் மகத்துவங்கள் ஏற்படவும் சிகரத்தை எட்டிப்பிடிக்கவும் தெய்வ வழிபாடுகள் தான் உங்களுக்குத் தேவை.

### விரயாதிபதி காலில் சஞ்சரிக்கும் நேரம்!

(6.12.2008முதல் 19.1.2009 வரை)

சூரியன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் அதிகரிக்கும் எனவே சுப விரயங்களை ஏற்படுத்திக்கொள்வது நல்லது. குடும்பத்திற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கலாம். வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டலாம்.பாடு பட்டுத்தேடிய பணத்தை பத்திரமாக வைக்க இடம் , பூமிகள் வாங்கி மகிழலாம். பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்கலாம். பழைய கடன்களைக்கொடுத்து புதிய மனிதராக உலா வரலாம்.

### இலாபம் இரட்டிப்பாக வரும் நேரம்!

(20.1.2009 முதல் 21.3.2009 வரை)

சந்திரன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் வருமானம் அதிகரிக்கும் இதுவரை இருந்த வரவைக்காட்டிலும் இப்போது இரு மடங்காக வந்து சேரும். இதைச் செய்வோமா? அதைச் செய்வோமா என்ற எண்ணம் மேலோங்கும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பொன் - பொருள் சேர்க்கைக்கும் வழி பிறக்கும்.

உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது. பங்குச்சந்தையிலும் வெளிநாட்டு வர்த்தகத்திலும் முடங்கிக்கிடந்த முதலீடு இப்பொழுது வளர்ச்சி பெறும்.

### ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படும் நேரம்!

(22.3.2009 முதல் 8.12.2009 வரை)

செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சரிக்கிறார். மன நிம்மதி குறையலாம். ஆரோக்கியத்திற்காக அடிக்கடி செலவிடவேண்டிய சூழ்நிலை உருவாகும். தொழில் கூட்டாளிகளால் இழப்புகள் உருவாகலாம். பிறரை நம்பிக் கொடுத்த் பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். பிள்ளைகளாலும் பிரச்சினைகள் அதிகரிக்கும்.

எனவே இக்காலத்தில் குரு ப்ரீதியை முறையாகச் செய்வது நல்லது. செவ்வாய்க் குரிய ஸ்தலமான சிவன் கோவிலுக்குச் சென்று ***என்ளுப்பூ மூக்கு எழில் குவளைப் பூக்கண்கள்*** என்ற தையல்நாயகி பதிகத்தைஉமா தேவியார் சந்நிதியில் பாடுங்கள் தைரியம் பிறக் கும்.

1.5.2009 முதல் 15.8.2009 வரை கும்பத்தில் குரு உலா வரும் பொழுது உத்தி யோக மாற்றம், ஊர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். எதிரிகள் பலம் கூடும் இந் நேரத்தில் எதையும் முன்யோசனை யோடு செய்வது நல்லது.

### கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய நேரம்!

(29.6.2009முதல் 12.11.2009 வரை)

குரு வக்கிர கதியில் இயங்குகிறார். இக் காலம் ஒரு இனிய காலமாகவே நீங்கள் கருதலாம். 4,10க்கு அதிபதி வக்கிரம் பெறும் பொழுது நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். சோர்வு அகன்று துணிவும் தன் நம்பிக்கையும் கூடும். தூர தேச பயணங்களில் இருந்த தடை அகலும். பெயரும் புகழும் பெற்ற மனிதர்களின் பின்னணியில் சீரும் சிறப்பும் மிகுந்த வாழ்க்கையை அமைத்துக்கொள்வீர்கள். இக்காலத்தில் முருகன் வழிபாடு, சந்தனக்காப்பில் சண்முகனை தரிசிக்கும் வாய்ப்பும் பெற்றால் ச்கல பாக்கியங்களும் உங்களுக்கு வந்து சேரும்.

### கன்னி ராசிப் பெண்களுக்கு

கன்னி ராசியில் பிறந்த பெண்களுக்கு செல்வாக்கு மேல் ஓங்கும். செல்வ நிலை உயரும் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். இல்லம் கட்டி குடியேற வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும்.

கணவன் -மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். குடும்பப் பெரியவர்களை கலந்தாலோசித்து எந்த முடிவும் எடுப்பது நல்லது. உடல் நலனுக்காக செலவிட்ட தொகை இனி குறையும். அம் பிகை வழிபாட்டில் ஆர்வம் செலுத்துங்கள். குடும்ப உறுப்பினர்கள் அனைவருடைய ஜாதகத்தையும் ஆராய்ந்து தெசாபுத்திக்கு ஏற்ற தெய்வங்களையும் ஸ்தலங்களையும் தேர்ந்தெடுத்து வழிபட்டு வாருங்கள்.பௌர் ணமி கிரி வலத்தாலும் பலன் கிடைக்கும்.

### பலன் தரும் வழிபாடு!

தெட்சணாமூர்த்தியை பூக்கொண்டும், பாக்கொண்டும் வழிபட்டு வாருங்கள். ***வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே*** என்ற குரு கவசப்பாடலை சந்நிதியில் பாடுங்கள். சந்தோஷங்கள் நாளும் வந்து சேரும்.

**வளரும்**

# இலங்கையின் உல்லாசப் பயணத்துறைக்கான சவால்களில் மும்பாய் தாக்குதல் முக்கிய இடம்

## உல்லாச மற்றும் ஹோட்டல் துறை தலைவர் சிறிலால் மித்தபால

(கொழும்பு)

இந்தியாவின் வர்த்தக நகரங்களில் ஒன்றான மும்பாயில் கடந்த வாரம் நடை பெற்ற தாக்குதலால் இலங்கையின் உல்லாசப் பயணத்துறை பாதிக்கப்படலாம் என அந்நாட்டின் உல்லாச மற்றும் ஹோட்டல் துறைகளின் தலைவர் சிறிலால் மித்தபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தியாவின் மும்பாய் நகரில் நடை பெற்ற தாக்குதல் இலங்கையின் உல்லாசப் பயணத்துறையை பாதிக்கலாம் என இலங்கையின் விடுதிகள் சபை தெரிவித்துள்ளது.

உலகில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிகளை தொடர்ந்து உல்லாசப்பயணத்துறை பல சரிவுகளை சந்தித்துவருகின்றது.

கடந்த பல மாதங்களாக முன்பதிவுகள் பல இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

ஆனால் இந்தியாவில் நடைபெற்ற சம்பவங்கள் விடுதி உரிமையாளர்களுக்கு மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் காலம் பண்டிகைக்காலமாக இருக்கும் போது உல்லாசப் பயணிகளின் வரவில் வீழ்ச்சி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மும்பாயில் நடைபெற்ற தாக்குதல் இலங்கையின் உல்லாசப்பயணத்துறைக்கு அதிக அனுகூலங்களை ஏற்படுத்தலாம் என பலர் தெரிவித்து வரும்போதும் அது உண்மையல்ல.

இலங்கையில் உல்லாசப் பயணத் துறையை அது நிச்சயமாக பாதிக்கும் மேலதிக முன்பதிவுகளை எதிர் பார்க்க முடியாது.

உல்லாசப்பயணத்துறை 3 சவால்களை சந்தித்து வருகின்றது. ஒன்று உள்நாட்டுப் போர் இரண்டாவது உலகத்தின் பொருளாதார நெருக்கடிகள்,தற்போது இந்தியாவில் தோன்றியுள்ள நெருக்கடிகள் தற்போது இந்தியாவில் தோன்றியுள்ள நெருக்கடி .இது முழு ஆசிய பிராந்தியத்தையும் அச்சம் மிகுந்த பகுதியாக மாற்றியுள்ளது என்றார் அவர்.(ஓ-6)

# கோழி முட்டையில் செடி வளர்ந்த அதிசயம்

(சென்னை)

கோழி முட்டையில் செடி வளர்ந்துள்ள அதிசயம் நடந்துள்ளது.

தென்காசி கீழப்புலியூர் உச்சி மாகாளி அம்மன் கோயில் மூதலாம் தெருவைச் சேர்ந்தவர் கணபதி விவசாயி. இவரது வீட்டில் கோழி வளர்க்கிறார்.

நாட்டுக்கோழி ஒன்று முட்டை இட்டு வருகிறது. இந்த முட்டைகளை கணபதி சேகரித்து வருகிறார். கோழி அடை காக்க முட்டைகளை கணபதி வைத்துள்ளார்.

நேற்று முன்தினம் திடீரென ஒரு முட்டையில் இருந்து செடி ஒன்று வளர் வதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்.

இது பற்றிய தகவல் அப்பகுதியில் பரவியது. இதனையடுத்து திரளானோர் கணபதி வீட்டுக்குச் சென்று கோழி முட்டையில் செடி வளர்ந்த அதிசயத்தைப் பார்த்துச் சென்றனர். (ஓ-6)

காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

– திருவள்ளுவர்

வலம்புரி

## இயற்கையும் செயற்கையும் தீவக மக்களைப் படுத்தும் பாடு

யாழ்ப்பாணத்தில் இயற்கையாலும் செயற்கையாலும் எந்த அழிவு ஏற்பட்டாலும் அதன் பெரும் பாதிப்பை தீவக மக்கள் அனுபவித்துக் கொள்கின்றனர்.

அவ்வகையில் கடந்த 26ஆம் திகதி கடும் மழை, புயல் காரணமாக தீவகத்தையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் பண்ணை வீதி பாரிய சேதத்திற்கு உட்பட்டுள்ளது.

இதனால் தீவக மக்களின் போக்குவரத்து முடங்கிப் போயுள்ளதுடன் தீவகத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள், பணியாளர்கள் அங்கு செல்ல முடியாத நிலையில் மாணவர்களின் கல்வி முற்றாக பாதிக்கப்படுவதுடன்,

அலுவலகங்கள் இயங்க முடியாமையால் தீவக மக்களின் இயல்பு நிலையும் குழப்பமடையும் சூழமைவு ஏற்பட்டுள்ளது.

இதற்கு மேலாக பண்ணை வீதி உடைந்து போயுள்ளதன் காரணமாக தரைவழிப் போக்குவரத்து தடைபட்டதால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

குறிப்பாக இரவு நேரம் –ஊரடங்கு வேளை திடீர் சுகவீனமுற்றால் அல்லது பிரசவ வேதனை ஏற்பட்டால் அவர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவர முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் உயிராபத்துக்கள் ஏற்படும் அபாயமும் உண்டு. எனவே காலாகாலமாகப் பாதிப்படையும் தீவக மக்களின் விடயத்தில் பலரும் அக்கறை கொள்வது கட்டாயமானதாகும்.

அவ்வகையில் தீவகத்தில் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதே தீவக மக்களின் நலனைப் பேணுவதற்கான ஒரே வழியாக இருக்க முடியும்.

அதன் முதற்படியாக நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெறுவதற்கு வசதியாக வேலணை மத்திய மருந்தகத்தை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்துவது கட்டாயமானதாகும்.

வேலணை மத்திய மருந்தகத்தை ஆதார வைத்தியசாலையாக்குவதன் மூலம் பௌதிக வளங்கள் மற்றும் வைத்தியர்கள், தாதிமார்கள் உள்ளிட்ட மருத்துவ பணியாளர்களும் துணை மருத்துவ சேவைகளும் விஸ்தரிக்கப்படும்.

இதன் மூலம் மேற்குறிப்பிட்ட இடங்களை சேர்ந்த மக்கள் மருத்துவ சேவையை பெறமுடியும்.

இது விடயத்தில் யாழ்.அரச அதிபர் மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணியாளர்கள் ஆகியோர் அதீத அக்கறை எடுத்து வேலணை மத்திய மருந்தகத்தை ஆதார வைத்திய சாலையாக தரமுயர்த்தும் நடவடிக்கையை மேற்கொள்வது காலத்தால் செய்யும் பேருதவியாகும்.

அதேநேரம் பெரும் மழை, புயலால் உடைந்து போன பண்ணை வீதியை திருத்தும் விடயத்தில் வீதியின் உறுதித் தன்மையில் அதிகூடிய கவனம் எடுக்கவேண்டும்.

ஏற்கனவே பண்ணைப்பாலம் (சங்கிலிப் பாலம்) அமைக்கப்பட்டபோது அதன் உயரம், அதற்கேற்றவாறு வீதியை உயர்த்துவது தொடர்பில் உரிய கவனம் எடுக்கவில்லை என்றே கூற வேண்டும்.

இத்தகையதோர் தவறு ஏற்படாமல் இருக்கவும் திருத்தியமைக்கப்படும் பண்ணை வீதி நீண்ட உறுதித்தன்மையை கொண்டதாக அமையவும் நிதானமான செயற்றிட்டம் அவசியம்.

அவசரம் கருதி தற்காலிகமாக பண்ணை வீதி அமைக்கப்படுமாக இருந்தால் அதனால் பெரும் சேதம் ஏற்படும் அபாயம் உண்டென்பது உணர்வதற்குரியது.

# தமிழ் மக்களால் தமிழீழத்திற்கு ஆணை; அதனை விட குறைந்த தீர்வுக்கு செல்வதா?

## மாவை சேனாதிராஜா

(கொழும்பு)

தமிழ் மக்கள் தமிழீழத்திற்கான ஆணையை வழங்கியுள்ள நிலையில் அதனை விட குறைந்த தீர்விற்கு செல்வதா என்பதே தற்போதைய கேள்வி எனவும் தமிழீழம் என்பது தமிழ் மக்கள் தமது இழந்த உரிமைகளை பெற்றுக்கொள்ளும் முனைப்பாகும் எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்ட போது அதற்கு எதிராகவே தமிழ்க்கட்சிகள் குரல் கொடுத்தனர். எனவே அந்த அரசியல் அமைப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் தற்போதைய நடைமுறைகள் தம்மைப் பொறுத்தவரையில் யதார்த்தம் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை ஏற்கனவே முன்னாள் தலைவர் அமிர்தலிங்கமும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியிடம் தெளிவுபடுத்தியுள்ளதாக மாவை குறிப்பிட்டுள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு செவ்வி அளித்த அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக முனைப்புகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இதில் இணக்கம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு இது தொடர்பாக அறிவிப்பார்கள். இதன் பின்னரே அடுத்த நடவடிக்கை என்ன என்பது தொடர்பாக தாம் அறிவிப்போம் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியில் தமிழ் நாட்டின் அழுத்தங்களின் அடிப்படையில் போர் நிறுத்தம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் இறுதி நிலைப்பாட்டை இந்தியா தமக்கு அறிவிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மனித அவலங்களை கருத்தில் கொண்டே போர் நிறுத்தக்கோரிக்கை முன்வைக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதங்களை கைவிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் எனக் கோருவது ஒரு முறையற்ற முறைப்பாடு என்றும் மாவை தெரிவித்துள்ளார்.

அயர்லாந்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் பெரிய வெள்ளி உடன்படிக்கை இவ்வாறான நிபந்தனையின் கீழ் கொண்டுவரப்படவில்லை.

இதனை இலங்கையும் பின்பற்ற வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் தெளிவான தீர்வு எதனையும் முன்வைக்கவில்லை. சிங்களத்தலைவர்கள் இதனை தீர்க்க வேண்டும் என்ற அக்கறையையும் கொண்டிருக்கவில்லை. இதுவே அடிப்படை. (ஓ-6)

# கைப்பற்றிய இடங்களைப் பாதுகாக்க புதிதாக 50 ஆயிரம் படையினர்

## அரசு தீர்மானம்

(கொழும்பு)

வடக்கில் யுத்தத்தின் போது கைப்பற்றப்பட்ட இடங்களை தக்க வைத்துக்கொள்ள 50 ஆயிரம் பேர் கொண்ட விசேட படை ஒன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பொறுப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு இராணுவத்திற்கு புதிதாக 22 ஆயிரம் பேரும் ,கடற்படைக்கு 7ஆயிரம் பேரும் ,விமானப்படைக்கு 5ஆயிரம் பேரும் பொலிஸ்படைக்கு 15ஆயிரம் பேரும் உடனடியாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்கள் பயிற்சி பெற்று சேவையில் இணையும் வரை இப்போது பொறுப்பில் இருப்பவர்கள் கடமையாற்றுவார்கள். இக்காலப்பகுதியில் தெற்கில் பாதுகாப்பு கடமைகளை கையாள்வதற்கென 40 ஆயிரம் ஊர்காவற்படையினரின் சேவை மேலதிகமாக பெறப்படவுள்ளது. புதிய நியமனங்களுக்கான அனுமதி மற்றும் செலவீனம் தொடர்பான அங்கீகாரம் என்பவற்றை அரசாங்கம் ஏற்கனவே வழங்கியுள்ளது. (ஓ-6)

# பூஸா கைதி ஒருவரை பார்வையிட ஒரு நாளில் இருவருக்கு மட்டுமே அனுமதி

(கொழும்பு)

காலி பூஸா முகாமில் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களுடைய உறவினர்கள் திங்கள் முதல் வெள்ளிவரை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

பூசா தடுப்பு முகாமில் காணாமல் போனோர் கடத்தப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய் யும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கண்காணிப்பு குழுவுடன் கடந்த 27ஆம் திகதி வியாழக்கிழமை விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தடுத்து வைக்கப்பட்டவர்களுடன் உரையாடிய போது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பார்வையிடுவதில் பல சிக்கல்கள் இருப்பது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக சிறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது தடுத்து வைக்கப்பட்டவர்களை அவர்களது உறவினர்கள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை பார்வையிட அனுமதிப்பதாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை ஒரு நாள் பார்வையிட அவரின் உறவினர் இருவருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுவதுடன் பார்வையிட செல்பவர் கிராம சேவகரின் கடிதம் அல்லது பொலிஸ் பதிவின் மூலம் உறவினர் என்பதை உறுதிப்படுத்தும் பட்சத்திலேயே அனுமதி வழங்கப்படும்.

பொலிஸ்பதிவு கிராம சேவகரின் கடிதம் இல்லாதவர்கள் தமது தேசிய அடையாள அட்டையின் மூலம் உறவினர் என்பதை உறுதிப்படுத்தி அனுமதியைப் பெறலாம்.இதற்கு சிறை அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள் என்கிறார்.

கண்காணிப்புக்குழுவினரால் விசாரணை நடத்தப்பட்ட போது சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களில் 190 பேர் சிறு சிறு குற்றம் செய்தவர்கள் என இனங்காணப்பட்டதுடன் மிக விரைவில் அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# அவுஸ்திரேலியாவில் படகுடன் 12 இலங்கையர் கைது

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் மேற்குக் கரையோரத்தில் 12 இலங்கையர்களுடனான படகொன்றை கைப்பற்றியுள்ளதாக அவுஸ்திரேலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழன் அன்று ஸ்டீப் பெயின்ட் எனுமிடத்தில் இப்படகை அதிகாரிகள் மறித்து சோதனையிட முயன்ற போது படகில் இருந்தவர்களில் சிலர் கரையை அடைவதற்காக நீந்திச்செல்ல முயன்றதாகவும் பின்னர் அவர்கள் மீண்டும் படகில் ஏறியதுடன் அனைவரும் வடக்கு நோக்கிச்சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் படகு அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டது. இவர்களை அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கு கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய குடிவரவு அதிகா ரிகள் மேற்கொண்டிருந்தனர் .

படகில் இருந்தவர்கள் தம்மை இலங்கையர் என அடையாளப்படுத்தியதுடன் தாம் மீனவர்கள் எனவும் தெரிவித்ததாகவும் ஆனால் அப்படகில் மீன் பிடி உபகரணங்கள் எதுவும் இருக்கிறதா என்பதை உறுதிப் படுத்த முடியவில்லை எனவும் அவுஸ்தி ரேலிய புலனாய்வு அதிகாரி போல் மத்தியூஸ் தெரிவித்துள்ளார். இப் படகு வழி மறிக்கப்படாமல் இவ் வளவு தூரம் வந்துள்ளமை ஆச்சரியம் அளிக்கிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

படகில் இருந்தவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொண்டமைக்கான காரணம் தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் அவர்களுக்கான தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவுஸ்தி ரேலிய குடிவரவு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி உலகிற்கு நன்மை செய்தல்



நாம் நல்லதையே செய்ய வேண்டும். பிறருக்கு உதவுவது என்பது ஒரு பேறு என்ற எண்ணம் நமக்கு எப்போதும் இருக்குமானால் நன்மை செய்வதற்கான ஆசை மிகவும் ஆற்றல் வாய்ந்த தூண்டு சக்தியாகி விடும். ஐந்த காசுகளைக் கையில் எடுத்துக் கொண்டு உயரமான மேடையில் நின்று கொண்டு, *பிச்சைக்காரரா, இதோ* கூறாதீர்கள்.அவன் இருந்ததால் தானே அவனுக்குத் தானம் செய்து அதன் மூலம் உங்களுக்கு நீங்களே உதவ முடிந்தது என்று அவனிடம் நன்றியுடன்இருங்கள்.

பெற்றுக் கொள்பவனல்ல, கொடுப்பவனே பேறுபெற்றவன்.உங்கள் தானத்திறத்தையும் இரக்கத்தையும் இந்த் உலகத்தில் செயல்படுத்தி அதன் மூலம் நீங்கள் தூய்மையும் நிறை நிலையும் அடைவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றி உடையவர்களாக இருங்கள்.

# கடத்திச் செல்லப்பட்ட இளைஞன் பொலிஸாரால் சடலமாக மீட்பு

(கொழும்பு)

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியை அண்டிய பகுதியில் சனிக் கிழமை காலை சூட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று மீட்கப் பட்டுள்ளது.

தாழ்வுபாடு வீதியில் உள்ள எழுத்தூர் சந்தியில் இருந்து தரவன் கோட்டை பகுதிக் குச் செல்லும் உள்ளக வீதியில் வெள்ள நீரில் வீசப்பட்டுஅப்பகுதியில் அமைந்துள்ள மதகு ஒன்றிற்கு அருகில் இச் சடலம் பொலிஸா ரால் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் காணப்பட்ட இடத்திற்கு விரைந்து மரண விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட பதில் நீதிவான் நு.கயஸ் பல் டானோ முன்னிலையில் சடலம் உறவினர்க ளால் அடை யாளம் காட்டப்பட்டிருக் கின்றது.

மேற்படி நபர் இம் மாதம் 19ஆம் திகதி அன்று மன்னார் மூர் வீதி பகுதியில் நள்ளி ரவிற்குப் பிற் பாடு 12.45 மணியளவில் ஆயுத தாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட 21 வயது டைய நவதீஸ் என்ற இளை ஞன் என அடையா ளம் காணப்பட் டுள்ளது.

மரண விசாரணைகளை மேற் கொண்ட பதில் நீதிவான் நு.கயஸ் பல்டானோ குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்திய பின் உறவினர்களிடம் கையளிக்குமாறு மன்னார் பொலிஸாருக்கு உத்தரவு பிறப் பித்துள்ளதை அடுத்து மேற்படி சடலம் மன் னார் வைத்திய சாலையின் பிரேத அறை யில் வைக்கப்பட்டுள்ளது.

சடலம் காணப்பட்ட இடத்திற்கு மன்னார் பிரதேச செயலாளர் மற்றும் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் வருகை தந்திருந்த மை யும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

## மூன்று கப்பல்களிலிருந்து பொருட்கள் இறக்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தில் 3 கப்பல் களிலிருந்து பொருட்கள் இறக்கப்பட்டு வரு வதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரி வித்தார். இதில் மஹா கப்பலிருந்து அரிசி இறக்கப்பட்டு விட்டதாகவும் யால கப்பலி ருந்து மாவும் டப்ளின் கப்பலிலிருந்து கட்ட டப் பொருட்களும் இறக்கப்பட்டு வருவதா கவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை காங்கேசன்துறை துறை முகத்தில் தரித்து நின்ற நிமல கப்பல் கடந்த வாரம் புயலுடன் பெய்த மழையினால் பாதிக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த யாழ்.அ ரச அதிபர் திருத்த வேலைகள் நடைபெறுவ தாகவும் கூறினார். (5)

# வடக்கில் வெள்ள நிவாரணம் ஐ.நா. சபை மேற்கொள்ளும்

(கொழும்பு)

கடும் மழை வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட வடக்கு மக்களுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு நிவாரணங்களை வழங்கவுள்ள தாக அறிவித்துள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் முக வர் நிறுவனம், உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் என்பன இணைந்து பாதிக்கப்பட்டோருக்கான நிவார ணப் பொருள் விநியோகத்தை மேற் கொள் ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணங்களை வழங் குவது தொடர் பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு யாழ்ப் பாணத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தி யுள்ளது.

இந்த நிலையில் வெள்ளத்தினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவ தற்கு போதிய ளவு உணவு மற்றும் கூடாரங் கள் தேவைப்படு வதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளி நொச்சி மற்றும் மன்னார், கிழக்கில் திருகோண மலை ஆகிய மாவட்டங்களே மழையி னால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (5)

# இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் பிரதமரை சந்திக்கும் குழுவில் ராதிகா பங்கேற்பார்

## சமத்துவ மக்கள் கட்சி அறிவிப்பு

(சென்னை)

இலங்கை தமிழர் பிரச்சினை சம்பந் தமாக அனைத்து கட்சி தலைவர்களும் முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் பிர தமரை சந்திக்கும் குழுவில் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் ராதிகா சரத் குமார் பங்கேற்பார் என்று சமத்துவ மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் கரு. நாகராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நிரந் தீர்வு காண வேண்டும் என்று அனைத்து கட்சியினரும் குரல் கொடுத்தும், போராட் டங்கள் நடத்தியும் வருகின்றனர். போராட் டங்களின் நோக்கம் ஒன்று தான் என்றாலும் கட்சிகளின் நிலைப்பாடுகள் வேறுவேறு விதமாக இருக்கின்றன.

எனவே ஒருமித்த உணர்வோடு அனைத்து கட்சிகளும் போராட வேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி வலியுறுத்தியது. மேலும் முதலமைச்சர் அனைத்து கட்சிகூட்டம் நடத்தி முடி வெடுக்க வேண்டும் என்று குரல் கொடுத்ததோடு ஒக்டோபர் 14ஆம் திகதி அன்று நடந்த கூட் டத்திலும் பங்கேற்று கருத் துக்களை பகிர்ந்து கொண்டோம். அதையடுத்து நடத்தப்பட்ட மனித சங்கிலி அணி வகுப்பிலும் ராதிகா சரத்குமார் தலைமையில் நாங்கள் பங்கேற் றோம்.

இந்த நிலையில் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் ஆர். சரத்குமார் வெளிநாட்டில் இருப்பதால் அனைத்து கட்சி தலைவர்களும் எதிர்வரும் 4ஆம் திகதி முத லமைச்சர் கருணாநிதி தலைமையில் பிரத மர் மன்மோகன் சிங்கை குழுவில் அவர் சார் பாக ராதிகா சரத்குமார் பங்கேற்கிறார் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)




# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

# வழிபடுநர் சபை - 2009

மேற்படி கோயிலுக்கு 2009 ஆம் ஆண்டுக்கான வழிபடுநர் சபை உறுப்பி னர்களாகச் சேர விரும்பும் அல்லது புதுப்பிக்க விரும்பும் கீழ்க்காணும் தகைமை யுள்ள சகல வழிபடுநர்களும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை "பொருளாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன்.கோயில் , நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபால் கட்டளையாகவோ பெற்று விண்ணப்பத்துடன் சேர்த்து 2008 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராம் திகதி (31.12.2008) மாலை 5.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் , நயினாதீவு" என்ற முகவரியிட்டு கடிதம் மூலம் அனுப்புமாறும் அல்லது கோயில் அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழிபடுநர் சபை உறுப்புரிமை விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான தகைமைகள் :**

1. அ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதியில் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும்,
   ஆ) இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்,
   இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநராகவும்,
   ஈ) இலங்கைக்குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்கத் தகுதியுடையவர் , ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்

2. அ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடைபெறும் நான்கு கால நித்திய பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின்

   அல்லது

   ஆ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மஹோற்சவ திருவிழாக்கள் உட்பட எந்தவொரு விசேட நைமித்திய உற்சவ பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும் மேற்கூறிய நித்திய , விசேட , நைமித்திய பூசைகள் , திருவிழாக்கள் மஹோற்சவம் ஒன்றை , ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ , வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரிமை 2 (அ) அல்லது (ஆ) கூற்றின் படி அக்குடும்பமோ அல்லது அவ் வகுப்பினரோ தத்தமக்குள் வயது வந்த ஒருவரை தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா பத்து (10/-) செலுத்தலாம் அத்தகைமை அற்றவர்கள் மேற்கூறிய உறுப்புரிமை (அ) அல்லது (ஆ) இன்படி

   இ) தனது விண்ணப்பப்படிவத்துடன் வருடாந்த அங்கத்துவ பணமாக ரூபா 50/- (ஐம்பது) "பொருளாளர் , ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் , நயினாதீவு" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும். அத்துடன் , எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்தவொரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும் இக்கோயில் ஊழியராக அல்லது மத குருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகள் பெறாத ஒருவராகவும் இக்கோயிலில் இலாபகரமான எவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.

*குறிப்பு :-* விண்ணப்பதாரியின் கையொப்பம் ஒரு சமாதான நீதிவான் , இந்து மத குரு ,இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர் அல்லது அரசாங்க பாடசாலை அதிபர் மூலம் அத்தாட் சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான றபர் முத்திரை இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ரூபா 5/- செலுத்தி உரிய விண்ணப்பப்படிவத்தை கோயில் பணிமனையில் பெற்றுக்கொள் ளலாம்.

*அன்னையின் சேவையில்*

**கு.சரவணபவானந்தன் (ஜே.பி)**

கௌரவ செயலாளர், அறங்காவலர் சபை,

*நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.*

C/1805


## இந்திய நிவாரணப் பொருட்கள் இன்று வன்னிக்கு செல்கிறது

(கொழும்பு )

இந்திய மக்களால் வன்னியில் பாதிக் கப்பட்டமக்களுக்கு விநியோகிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொரு ட்களில் முதலாவது தொகுதியை இன்று திங்கட்கிழமை புதுக்குடியிருப்புக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. இருபதுக்கு மேற்பட்ட லொறிகளில் நிவாரண பொருட்கள் ஏற்றப்பட்டு வவுனி யாவில். அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நேற்று முன் தினம் சனிக் கிழமையும் பொருட்கள் லொறிகளில் ஏற்றப் பட்டன. இவை இன்று திங்கட்கிழமை புதுக் குடியிருப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க களஞ்சியசாலைக்குஅனுப்பி வைக்கப்படவி ருக்கின்றன. (ஓ)

## குடிநீர் விநியோகம் சீர் செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலைக்கான குடிநீரை யாழ். மாநகர சபை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரச அதி பர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதன் மூலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஏற்பட்ட குடிநீர் தட்டுப்பாடு நீங்கி சீராக கிடைப்பதற்கு வழி செய்யப்பட்டதா கவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

# தொடரை முழுமையாக ருசித்தது இலங்கை அணி

# சொந்த மண்ணில் சிம்பாவேக்கு ஐந்தாவது தோல்வி




(ஹராரே)

ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் இலங்கை அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை வீழ்த்தி தொடரை 5:0 என்ற கணக்கில் முழுமையாக சுவீகரித்தது.

இதன் மூலம் சிம்பாவே அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி தொடரை முழுமையாகச் கைப்பற்றி இலங்கை அணி வெள்ளை அடித்தது.

சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது.

இதில் முதல் நான்கு போட்டிகளிலும் இலங்கை அணி வெற்றிபெற்று தொடரை 4:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் 5ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்று ஹராரேயில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களைமிழந்து 152 ஓட்டங்களை எடுத்தது.

இதில் கடாம்பி 40, மத்யூஸ் 31, சங்கக்கார 28 ஓட்டங்களையும் எடுத்தனர். அணித் தலைவர் மஹேல ஜெவர்த்தனா இத்தொடரில் பங்கேற்ற 5 போட்டிகளில் இரண்டாவது முறையாகவும் இன்று ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் ரெயின்ஸ்போட் 3 விக்கெட்டுக்களையும் முபாரிவா 2 விக்கெட் டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 153 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி இறுதி வரை போராடிய போதும் முத்தையா முரளிதரனின் துல்லியமான சுழலால் 44 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 133 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 19 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

ஒருகட்டத்தில் 58 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 6 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது. எனினும் 7ஆவ்து விக்கெட்டுக்காக இணைந்த டபேங்வா, உற்ஷயா ஜோடியின் சிறப்பான ஆட்டம் சிம்பாவே அணிக்கு நம்பிக்கை அளித்தது.

சிம்பாவே அணி இந்த ஜோடியை 40.2 ஓவர்களில் 130 ஓட்டங்களை எடுத்த போதே இலங்கை அணியை பிரிக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் டபேங்வா 39, அணித் தலைவர் உற்ஷயா 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சுழல்நாயகன் முத்தையா முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் குலசேகர 3, பெனாண்டோ 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 5:0என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

இப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த சுழல் நாயகன் முத்தையா முரளிதரன் ஆட்ட நாயனாக தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை இலங்கை அணியின் சுழல் மன்னன் அஜந்த மெண்டிஸ் பெற்றார்.

# மைக்கெல் கிளார்க்,ஹடின் சதம்;

# இரண்டாவது டெஸ்டில் ஆஸி.ஆதிக்கம்

(அடிலெய்ட்)

மைக்கெல் கிளார்க்,ஹடின் ஆகியோரின் சிறப்பான சதத்தின் மூலம் முதலாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும்மிழந்து535ஓட்டங்களைக் குவித்தது.

இதன் மூலம் நியூசிலாந்து அணியைவிட அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 265 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள நியூசிலாந்து அணி 2போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது..

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்று அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில்முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 28ஆம் திகதி அடிலெய்டில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 270ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரெட்மோன்ட் 83ஓட்டங்களையும் ரெய்லர் 44,மக்குலம் 30ஓட்டங்களையுமெடுத்தனர்.

பந்து வீச்சில் பிரெட் லீ 4 விக்கெட்டுக்களையும் ஜோன்ஸன், ஹயூரிஸ் ஆகியோர் தலா2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெ்டுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் 3 விக்கெட்டுக்களையும் இழந்து 241 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் 3ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய அவுஸ்ரேலிய அணி, மெக்கல் கிளார்க்,ஹடின்ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 535ஓட்டங்களைஎடுத்தது.

இதில் ஹடின் 169 ஓட்டங்களும் மைக்கெல் கிளார்க் 110 ஓட்டங்களையும் பொன்டிங் 79, ஹசி 70 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஓ பிறின் 3 விக்கெட்டுக்களையும் ரெட்மோன்ட் மார்டீன் மற்றும் அணித் தலைவர் விக்டோரி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 265ஓட்டங்களால் முதலாவது இன்னிங்ஸில் பின்னிலையிலிருந்த நியூசிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 35 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் ரெட்மோன்ட் 15, ஹவ் 13 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர். போட்டியின் நான்காம் நாள் இன்றாகும்.

(5)

# தென்னாசிய கிரிக்கெட்டுக்கு பாதிப்பு;


# பாகிஸ்தான் வீரர்கள் எச்சரிக்கை

(கராச்சி)

மும்பைத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா, இல ங்கை, பாகி ஸ்தான் போ ன்ற தென்னா சிய நாடு களி ன் கிரிக்கெட் டின் எதிர் கா லம் பாதிக்கப் படும் என்று பாகிஸ்தான் வீரர்கள் கம்ரான் அக்மல்,சொஹைல் தான்வீர் தெரிவித்துள்ளனர்.

டிசம்பரில் ஆரம்பமாகவிருந்த சம்பியன் லீக் தொடரில் பங்கேற்க அக்மல் மற்றும்



தான்வீர் இந்தியா வந்திருந்தனர். பயங்கரவாதத்தாக்குதல் ஆரம்பமாகியபோது மும்பை ஹோட்டல் ஒன்றில் பாதுகாப்பாகத் தங்கியிருந்தனர்.நேற்றுமுன்தினம் இவர்கள் நாடு திரும்பினர்.

இதுகுறித்து விமான நிலையத்தில் சொஹைல் தான்வீர் அளித்த பேட்டியில், மும்பை பயங்கரவாத செயல் கண்டனத்திற்குரியது. சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் சரணாலயமாக இந்தியா இருந்து வருகிறது. பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக பாகிஸ்தான் மற்றும் இலங்கை வர வீரர்கள் தயங்குகின்றனர். இந்த வரிசை யில் இந் தியா வும் சேர்ந்தது கவலை யளி ப்பதாக உள் து. கிரிக்கெட் மற்றும் வீரர் களின் எதிர் காலத்தை முன் னிட்டு இந்த மூன்று நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிராக இணைந் து செயல்படுவது முக்கியம். இவ்வாறு தான்வீர் கூறினார்.

இதுகுறித்து கம்ரான் அக்மல் அளித்த பேட்டியில், தாக்குதல் நடந்த இடத்தில் இருந்தோம் என்பதை நினைத்துப் பார்க்கவே பயமாகவுள்ளது. ஹோட்டல் அறையில் முடங்கிக்கிடந்த போது சொந்தக்காரர்கள் மற்றும் நண்பர்கள் தொலைபேசி மூலம் அடிக்கடி விசாரித்தனர். தொடர்ந்து அசம்பாவிதம் ஏற்பட்டால் விரைவில் நாடு திரும்பினோம். இதனால் இந்திய அணியின் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் மேலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அக்மல் கூறினார்.

(5)

# இந்தியாவில் டெஸ்ட் தொடரை விளையாடுவதா?

## இங்கிலாந்து இன்று முடிபை அறிவிக்கும்

(லண்டன்)

மும்பை தாக்குதலை தொடர்ந்து சுற்றுப் பயணத்தை பாதியில் ரத்து செய்து லண்டன் திரும்பிய இங்கிலாந்து கிரிக்கெட் அணி மீண்டும் இந்தியா திரும்புவது குறித்து இன்று முடிபு செய்யப்படும் என அந்நாட்டு கிரிக்கெட் நிர்வாக இயக்குநர் ஹியுஜ்மோரிஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒருநாள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வந்தது.

ஒரு நாள் தொடரை 5-0என்றகணக்கில் இங்கிலாந்து இந்தியாவிடம் பறி கொடுத்தது.

இந் நிலையில் 6வது ஒரு நாள் போட்டி நடைபெற இருந்த போது மும்பை தாஜ் ஹோட்டலில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

பாதுகாப்பு காரணங்களை கூறி இங்கிலாந்து அணி தனது சுற்றுப் பயணத்தை ரத்து செய்து நேற்று முன்தினம் நாடு திரும்பியது.

இந்திய பயணத்தை ரத்து செய்யக் கூடாது என்றும் எஞ்சியுள்ள போட்டிகளில் இங்கிலாந்து பங்கெற்று விளையாடி இந்தியாவுக்கு தார்மீக ஆதரவை தர வேண்டும் என்று முன்னணி வீரர்கள் அந்நாட்டு பத்திரிகை களில் கருத்து தெரிவித்து இருந்தனர்.

இந் நிலையில் இன்று அந்நாட்டு கிரிக்கெட் சபை கூட்டம் நடைபெற இருக்கிறது. அதில் மீண்டும் இந்தியாவுக்கு திரும்பி டெஸ்ட் தொடரில் விளையாடுவது குறித்து முடிபு எடுக்கப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் நிர்வாக இயக்குநர் ஹியுஜ் மோரிஸ் கூறியுள்ளார். இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முட்டையில் முளைத்த செடி



வழக்கமாக முட்டையிலிருந்து குஞ்சு தான் வெளியே வரும். ஆனால் இந்த முட்டையில் செடி முளைத்துள்ளது. தென்காசி கீழப்புலியூர் உச்சிமாகாளி அம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த கணபதி வீட்டில் நிகழ்ந்த இந்த அதிசயம் அனைவரையும் ஈர்த்துள்ளது. (விரிவான செய்தி உள்ளே...)

# மும்பைத் தாக்குதல் எதிரொலி சிவராஜ் பாட்டீல் பதவி விலகல்

மும்பையில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதல்களையடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட தோல்விக்கு தார்மீகப் பொறுப்பேற்று இந்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் பதவி விலகியுள்ளார்.

இதுவரை நிதி அமைச்சராக இருந்து வந்த தமிழகத்தைச் சேர்ந்த ப.சிதம்பரம் புதிய உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் சிவராஜ் பாட்டீல் தனது இராஜினாமாக் கடிதத்தை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சமர்ப்பித்தார்.

தற்போது இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் சுற்றுப் பயணம் செய்துவரும் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரதீபா பாடீல், சிவராஜ் பாட்டீலின் இராஜினாமாவை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

அதேபோல் சிதம்பரத்தை புதிய உள்துறை அமைச்சராக நியமித்திருக்கும் உத்தரவையும் குடியரசுத் தலைவர் மாளிகை அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

இதுவரை சிதம்பரம் கவனித்து வந்த நிதியமைச்சகத்தின் பொறுப்பை பிரதமர் மன்மோகன் சிங் கூடுதலாக கவனிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நரசிம்மராவ் அமைச்சரவையில் ஐந்து ஆண்டுகள் நிதியமைச்சராக இருந்தவர் மன்மோகன் சிங் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே மும்பைச் சம்பவத்திற்கு தார்மீகப் பொறுப்பேற்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனும் பதவி விலக முன்வந்ததாகவும் ஆனால் பிரதமர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## மூன்று தன்...

தவிர பல நிறுவனங்கள் உரிய முறையில் செயற்படவில்லை என அரசாங் கத்தினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளன.

எனினும் தன்னார்வு நிறுவனங்களை வெளியேற்றுவது தொடர்பான எந்தவொரு தகவலும் தமக்குத் தெரியவில்லை என மனிதாபிமான நிறுவனங்கள் அமையம் தெரிவித்துள்ளது. (ச-5)

## சீரற்ற கால...

ளனர். பருத்தித்துறை, கோப்பாய், சங்கானை மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் தலா ஒருவர் மரணமாகியுள்ளார்.

12 ஆயிரத்து 404 வீடுகள் முழுமையாகவும் 34ஆயிரத்து 388 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இடம் பெயர்ந்த 93 ஆயிரத்து 404 குடும்பங்களில் 25 ஆயிரத்து 862 குடும்பங்களைச் சேர்ந்த 94 ஆயிரத்து 965 பேர் 336 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் மேற் கொள்ளப்பட்டுவருவதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## விடுதலைப்...

இந்த நிலையிலே ஐந்து ஆண்டு காலப் பகுதி 2008 ஆம் ஆண்டுடன் நிறைவடைந்ததனை அடுத்தே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மீண்டும், மேலும்ஐந்து வருடங்களுக்கு இந்த தடையை நீடிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. (ச-5)

## யாழ்.மாவட...

தெரிவித்தார். அமைச்சர் ரிசாத் பதியுதீன் மேலும் தெரி வித்ததாவது,

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்க மாவட்ட அரச அதிபர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க யாழ்.மாவட்டத்திற்கு 110 இலட்சம் ரூபாவும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இருபது லட்சம் ரூபாவும் மன்னார் மாவட்டத்திற்கு முப்பது இலட்சம் ரூபாவும் திருகோணமலை மாவட்டத்திற்கு முப்பது இலட்சம் ரூபாவும் ஒதுக்கப் பட்டுள்ளது. (ச-5)

## நிவாரண...

கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழை, கடும் காற்று என்பன காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவது சம்பந்தமான உரிய திணைக்களத் தலைவர்களுடன் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர் விடயங்கள், நிவாரண முகாம்கள், உணவு, குடிநீர் விநியோகம், சுகாதாரம், எரிபொருள் விநியோகம், போக்குவரத்து, மின்சாரம், தொலைபேசி, வீதி மற்றும் பாலங்கள், கல்வி, அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயும் முகமாக சமூக சேவைகள் அமைச்சரின் யாழ்.பணிமனையில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு விசேட கலந்துரையாடல் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விசேட கூட்டத்தில் அமைச்சு உயர் அதிகாரிகள், அரச உயர் அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்கள மற்றும் துறை சார் பிரதிநிதிகளுடன் சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் பங்குபற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## இந்திய-பாக். உறவில்...

சந்தித்த சிரேஷ்ட பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் ஆப்கானிஸ்தான் எல்லையில் குவிக்கப்பட்டுள்ள ஒரு இலட்சம் பாகிஸ்தான் இராணுவத்தினரை இந்திய எல்லையில் நிலை நிறுத்த திட்டமிட்டிருப்பதாக கூறினார்.

இந்தியாவுடன் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு காரணமாக தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் கவனம் செலுத்த முடியாது போய் விடும் என்றும் அவர் தெரிவித்துள்ளதுடன் எல்லையில் போர் ஏற்படக் கூடிய சூழல் ஏற்பட்டால் அதற்கு இந்தியாவே காரணம் என்றும் கூறியுள்ளார்.

இந்நிலையில் பாக். இந்திய எல்லையில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

தாக்குதலைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் ஆற்றிய உரையில் மும்பை தாக்குதலுக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த சில அமைப்புகளே காரணமாக இருக்கலாம் என்று கூறியிருந்தார்.

இதேவேளை இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் பிராந்தியம் துணைபோகாதிருப்பதன் கடப்பாட்டை அந்நாடு கௌரவிக்க வேண்டும் என ஆளும் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை நடைபெற்ற ஆளும் காங்கிரஸ் மற்றும் சர்வகட்சி மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மும்பை சம்பவம் எங்கே இரு அணுவாயுத வல்லமை கொண்ட நாடுகளுக்கிடையே மீண்டும் போர் பதற்றத்தை வலுவடையச் செய்யுமோ என்ற அச்சம் மேலோங்கியுள்ளது. (ச-5)

## திடீர் சுற்றிவளைப்பு...

தெரிவிக்கின்றனர்.

கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் நேற்றுக்காலை நடத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது தமிழ் இளைஞன் ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் கைதான இவர்களிடமிருந்து இராணுவ உடைக்குச் சமனான 20 உடைகள் மற்றும் 45 பொத்தான்கள் போன்றனவும் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் கூறினார். இதன் போது கைதான தமிழ் இளைஞன் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாக பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

மாளிகாவத்தைப் பகுதியில் அமைந்துள்ள தொடர்மாடிக் குடியிருப்பில் தங்கியிருக்கும் மேற்படி தம்பதியினருடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ள இவ்விளைஞன் மேற்படி ஆடைகளை அவர்களது வீட்டில் மறைத்து வைத்துள்ளார்.

பாதுகாப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்து கைதான இவர்கள் மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்களுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் கூறினார்.

இதேவேளை மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தேடுதலின் போது 22 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தலவாக்கலை, நுவரெலியா, ஹட்டன், நோர்வூட், கொட்டகலை ஆகிய பகுதிகளிலேயே இந்த தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-5)

## இராணுவ நடவடிக்...

இவ்வாறு களமுனைகளிலும் இராணுவ முகாம்கள் மற்றும் பதுங்கு குழிகளிலும் தங்கியுள்ள இராணுவத்தினரை மாற்று இடங்களுக்கு அழைத்துச் செல்ல படைத்தரப்பினர் கடந்த சில நாட்களாகவே பல்வேறு நடைமுறைகளைக் கையாண்டு வருவதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

ஆயினும் வடக்கில் நிலவும் அடை மழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக இராணுவத்தினர் மற்றும் அங்கு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விநியோக நடவடிக்கைகளுக்கே தடை ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக வடக்கிற்கான போக்குவரத்து நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதனால் அதனாலேயே இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களுக்கான விநியோக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்திலும் இராணுவ முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வரும் படையினரின் கடும் தாக்குதல்கள் காரணமாக விடுதலைப் புலிகளுக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதோடு அவற்றை நிறுத்துவது தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றார். (ச-5)


## கல்வியாண்டு-2009

➢ உங்கள் பிள்ளைகள் கல்விச் செல்வத்தை இழக்காதிருக்க!

➢ கட்டுப்பாட்டுடன் உயர்ச்சி பெற்றிட!

**உங்கள் பிள்ளைகளை உடன் இணையுங்கள்**

தரம் :4 முதல் O/L வரை

6,7 – ENGLISH MEDIUM

தரம் : 5 புலமைப்பரிசில் விசேட வகுப்பு

**அனுமதிகள் 05-12-2008 வரை மட்டும்**

**சயன்ஸ் அக்கடமி**

**நல்லூர் ⟺ அரியாலை**

(C-1806)

வெற்றித் தேர்வு கௌரவிப்பு விழா புகைப்படம் தேவையானோர் உடன் தொடர்பு கொள்க: 021 222 9016


## மரண அறிவித்தல்

## சின்னையா இராசலிங்கம்

### (ரூபன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி)



கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும், தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசலிங்கம் அவர்கள் 30.11.2008 (நேற்று) ஞாயிற்றுக்கிழமையன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மணிமேகலையின் அன்புக் கணவரும், அமிர்தவல்லி, ராஜேஸ்வரி, காந்தரூபன் (லண்டன்), சாந்தரூபன் (சுவிஸ்), சுவேந்திரன், சுரேஸ், சசிகலா, ராதிகா, கிரிதரன், காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

சிறிரங்கநாதன், சண்முகநாதன் (ராணி ஸ்ரோர்ஸ், காலி) தங்கவடிவேல் (வலம்புரி), ரவீந்திரன், சர்வேஸ்வரி, மேகலை, சோபா, ரஜிதா, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனும், பிரகாந், பிருந்தா, பிரியங்கா, சஞ்சிகா, நௌசியா, பிரவீணன், கிரிசிகன், கௌதமன், கனுசிகா, சரணியா, சுதர்சன், தர்மிளா, வக்சலா, நிலக்ஷ்ன், சுகிர்தன், பவித்திரன், டிலக்சன், டிவாகர், திலக்சனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.12.2008) திங்கட்கிழமை, பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.10/1, தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். தொ.பே:- 077 127 2338, 060 221 9030

தகவல்:
பிள்ளைகள்

(C-1807)

## கண்ணீர் அஞ்சலி



வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த **இ.தங்கவடிவேல்** அவர்களின் அன்பு மாமனார்

**சின்னையா இராசலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-வலம்புரிக் குடும்பம்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.